# சைவநீதி

# SAIVANEETHI

விக்கிரம ஆடி



சைவ சமய வளர்ச்சி கருதிய
செய்தி தரும் மாத இதழ்

MONTHLY MAGAZINE OF
SAIVAISM JUL - AUG - 2000





ரூபா 25/-

# கதிர்காமக்கந்தன் மகோற்சவ சிறப்பு மலர்

## சைவநீதிக்கு உங்கள் பங்களிப்பு

- ☆ சைவநீதிக்குக் கட்டுரைகள், கவிதைகள் மற்றும் பொருத்தமான ஆக்கங்கள் தரக் கூடியவர்களிடமிருந்து எதிர்பார்க்கின்றோம். மாணவர்களும் ஆக்கங்கள் தரலாம்.
- ☆ சைவநீதி பற்றிய உங்கள் அபிப்பிராயங்களையும் எதிர்பார்க்கின்றோம். உங்கள் அபிப்பிராயங்களைப் பிரசுரிப்பதனுடன் மேலும் சிறப்பான முறையில் வெளியிடுவதற்குரிய கருத்துக்களையும் நடைமுறைப் படுத்துவோம்.
- ☆ உங்கள் ஆலய விழாக்களை முன்னிட்டுச் சைவநீதி சிறப்புமலர் வெளியிட விரும்புவோர் முன் கூட்டியே எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
- ☆ சந்தாதாரருக்கு இதழ் கிடைக்காதுவிடின் / முகவரி மாற்றம் போன்றவற்றை எமக்குத் தெரியப்படுத்தவும்.

## சைவநீதி ~ சந்தா விபரம்

| தனிப்பிரதி | | வருடச்சந்தா | |
|---|---|---|---|
| இலங்கையில் | - ரூபா 25.00 | இலங்கையில் | - ரூபா 250.00 |
| இந்தியாவில் | - ரூபா 25.00 (இந்திய ரூபா) | இந்தியாவில் | - ரூபா 250.00 (இந்திய ரூபா) |

ஏனைய நாடுகளில் ஸ்ரேலிங் பவுண் 10 அல்லது US $ 15. சைவநீதியின் வளர்ச்சிக்கு உங்கள் ஒவ்வொருவரதும் பங்களிப்புப் பெரிதும் வேண்டப்படும்.

சந்தா அனுப்பப்பட வேண்டிய முகவரி:

**C. NAVANEETHAKUMAR,**
**42,Janaki Lane,**
**Clolombo - 04,**
**Sri Lanka.**

சைவநீதி இதழில் வரும் கட்டுரைகளிலுள்ள கருத்துக்களுக்கு கட்டுரை ஆசிரியர்களே பொறுப்பாளிகளாவர்.

*~ இதழ் நிர்வாகிகள்.*

உ

சிவமயம்

''மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்''

# சைவநீதி

மலர் 4 விக்கிரம ஆடி சைவசமய வளர்ச்சி கருதி வெளிவரும் மாத இதழ் இதழ் 4

## மருவும் அடியார்கள் மனதில் விளையாடும் மரகத மயூரப் பெருமாள்

குறிஞ்சி நிலத் தெய்வம் முருகன். உயர்ந்தவர்களுக்கு உயர்ந்த இடம் கொடுப்பது இயல்பு தானே? நிலங்களுள் உயர்ந்தது மலை. இரு குறிஞ்சி நிலம். ஆக உயர்ந்த நிலத்தை, உயர்ந்த தெய்வமான முருகனுக்கு உரியதாக்கினர் முன்னோர். மலையில் எழுந்தருளும் முருகன் அடியார் மனக் குகையிலும் எழுந்தருளியுள்ளான். அடியார் மனக்குகையில் உறைவதால் அவன் குகன் என்னும் நாமம் பெறுகிறான்.

கலியுகத்தில் கண்கண்ட தெய்வமான கந்தப் பெருமான் தொழுது வழிபடு மடியர் காவற் காரப் பெருமானாகத் தீரா நோய்தீர்க்கும் பெருமானாக விளங்குகின்றன். ஆறு படைவீட்டுத்தலங்களிலும் எழுந்தருளியுள்ள பெருமான், மணிதரளம் வீசி அணி அருவி சூழக் கதிர்காமத்தில் எழுந்தருளி மருவும் அடியார் மனக் குறை நீக்ககின்றன்.

திருப்படை வீட்டுத் தலங்களிலும் மேலாய துவாத சாந்தத் தலமாக விளங்குவது கதிர்காமத்தலம். சிவத்தலங்களிலே கோயில் என்றும் சிதம்பரம் ஆகாய லிங்க முடைத்தாம் இரகசியத்தலமானது போல இதுவும் அங்கனே சோதிவடிவாய் எவராலும் விரும்பத்தகுந்த பரவியோமமூர்த்தி, எவராலும் காண்டற்கு அரியராய் விளங்கலின் இரகசியத் தலமாய் விளங்கும்.

அருணகிரிநாதராற் திருப் புகழ் பாடப் பெற்றதும், பழமையும், சிறப்புமிக்கதுமான கதிர்காமக் கந்தன் மகோற்சவச் சிறப்பு மலராக இம்மாத சைவ நீதி வெளிவருகிறது. கதிரைமலைக் கந்தனை வழிபடும் அடியார் பெறும் பேறுவற்றி சுப்பிரமணியத் தலக் கோவைப் பிள்ளைத் தமிழ், கூறுவதை பார்ப்போம்.

மாணிக்க நிறைகங்கை யாடியுன் னைப்பணிய வந்திடும் பூதலத் தோர்
வாயூமர் பாடவுங் கருடர்கண் பார்த்திடவு மலடிகள்பின் மைந்தர் பெறுவுங்
காணிற்கு மாரவே லாவென்னு மன்பரைக் கரடிபுலி யானை சிங்கம்
நாலிற் பணிந்தஞ்சி யோடவுங் கந்தனே கண்கண்ட தெய்வ மெனவே
யாணிப்பொன் முத்திமண் டபமேவு கச்சியினு னடியேனை யாண்டு கொண்டெ
னாகத்தில் வந்தபிணி தீர்த்திடவ முன்னிற்கு மாறுமுக மெய்த் தெய்வமே
சேணிற் புலோமசை வளர்த்தபெண் படிகணவ செங்கீரை யாடி யருளே
தேவரொடு மனிதர்பணி கதிர்காம வேலனே செங்கீரை யாடி யருளே.

**மாணிக்க கங்கையில் நீராடி கதிர்காமக் கந்தனை**
**வழிபட்டு அவன் அருள் பெறுவோமாக.**

உ
சிவமயம்

# சைவநீதி

உள்ளே......


1. மருவும் அடியார்கள்
   – ஆசிரியர் ........ 1
2. பொருளடக்கம் ........ 2
3. விநாயகர் ஸ்தோத்திரம் ........ 3
4. கதிர்காமத் தலம் பற்றிய வரலாறு
   – சாந்தையூர் சக்திவேல் ........ 4
5. வெற்றிலை வீரவேலான சம்பவம்
   – மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை ........ 6
6. கதிர்காமம் பற்றிய நூல்கள் ........ 7
7. கதிர்காம பாத யாத்திரை
   – பேராசிரியர் பொன். சக்திவேல் ........ 8
8. திருக்கதிர்காமம் – திருப்புகழ் ........ 9
9. 12
10. காரி நாயனார்
   – சிவ: சண்முக வடிவேல் ........ 14
11. அருமந்த அரசாட்சி
   – வித்துவான். வ. செல்லையா ........ 15
12. சிவஞானியின் சிறப்பு ........ 17
13. தீர்த்தக்கரையில் மனம் கரைந்த பாடல் ஒன்று
   – முருகவே பரமநாதன் ........ 19
14. A note on Paramukti
   - S. Shivapadasundaram. B.A ........ 20
15. சைவ நெறி பாடமும் பயிற்சி– ஆலய ஆமைப்பு
   – சாந்தையூரான் ........ 21
16. வள்ளுவத்தில் சைவ சித்தாந்தம் – 3 – அறிவாகிய மெய்ப்பொருள்
   – சித்தாந்தரத்தினம் க. கனேசலிங்கம். ........ 23
17. ஆடி அமாவாசை ........ 25
18. தேவர் கலி வலி வென்றமை ........ 27
19. சைவ வினாவிடை – சிவலிங்கவியல் ........ 28
20. Kathirgamam Theivanai Amman Temple Services and Administration 30



உ

# விநாயகர் ஸ்தோத்திரம்

1. கணபதி ஓம் ஜெய கணபதி ஓம்
கஜமுக ஐங்கர கணபதி ஓம்
குணபதியாம் சிவ கணபதி ஓம்
குண்டலி மண்டல கணபதி ஓம் - கணபதி ஓம் ஜெய

2. மூஷிக வாகன கணபதி ஓம்
மூலப்பிர வானக கணபதி ஓம்
மாசுர தேசிக கணபதி ஓம்
வல்லப மோகன கணபதி ஓம் - கணபதி ஓம் ஜெய

3. விக்ன வினாயக கணபதி ஓம்
விகசித நவமுக கணபதி ஓம்
உத்தர தபக் கோல கணபதி ஓம்
உத்துவ நாதன கணபதி ஓம் - கணபதி ஓம் ஜெய

4. பார்வதி பாரதி கணபதி ஓம்
பரம சிவ ஞான கணபதி ஓம்
பூர்ண புராதன கணபதி ஓம்
பூவண புரந்தர கணபதி ஓம் - கணபதி ஓம் ஜெய

5. சுத்த சதாசிவ கணபதி ஓம்
சுந்தர குஞ்சர கணபதி ஓம்
நித்திய தத்துவ கணபதி ஓம்
நிர்மல சிந்தைய கணபதி ஓம் - கணபதி ஓம் ஜெய

இந்த ஸ்தோத்திரம் செல்லக் கதிர்காமத்தில் தினமும் பாராயணம் பண்ணப்படுகிறது.

# கதிர்காமத் தலம் பற்றிய வரலாறு

— சாந்தையூர் சக்திவேல்

முருகனை வழிபடுவதற்கு உரிய திருப்பதிகளுள் மூர்த்தி, தலம், தீர்த்தம் எனும் மூன்றிலும் புகழ்பெற்றுத் திகழ்வது ஈழ நாட்டின் தென்பால் அமைந்துள்ள திருக்கதிர்காமம் ஆகும். கதிர்காமம் என்பது கடவுள் தன்மையுடைய ஒளியும் அன்பும் (கதிர்-ஒளி, காமம்-அன்பு) கலந்து விளங்கும் இடம் எனவும், ஆறு கதிர் பொறிகளால் பிறந்த ஆறுமுகன் வள்ளி மீது காதல் கொண்டு மணம் புரிந்த இடமாதலால் கதிர்காமம் ஆயிற்று எனவும், சிலர் "கதிரங் கருங்காலி" எனும் பிங்கல நிகண்டுச் சூத்திரத்தை எடுத்துக் காட்டாக கதிரமரம்(கருங்காலி மரம்) நிறைந்த கிராமம் ஆகையால் அவ்வாறு அழைக்கப்பட்டது என்பர்.

முருகன் சூரபன்மனை சங்கரிக்கும் நோக்கோடு எழுந்தருளிய பொழுது கதிர்காமத்தில் மாணிக்க கங்கைக்கு அருகே பசறை வகுத்து வீற்றிருந்தார் என புராணம் கூறுகின்றது. வள்ளி அம்மையாரை கண்டு காதலித்து மணம் முடித்த இடம் கதிர்காமம என்பது ஐதீகம். முருகப்பெருமான் முதலில் தெய்வயானை அம்மையாரை மணம் முடித்த பின் திருத்தணி மலையருகே வள்ளிமலையில் வள்ளி நாயகியை மணம் முடித்து இருவரை நோக்கி தாம் விரும்பும் தலம் கதிர்காமம் எனக் கூறி கதிர்காமத்தை அடைந்து சிந்தாமணி ஆலயத்தில் எந்தநாளும் அன்பர்கள் வழிபட்டு உய்யுமாறு வீற்றிருக்கிறார் என தக்கண கைலாசபுராணம் கூறும்.

பிள்ளையார் மலை, வீரவாகு மலை, தெய்வானையம்மை மலை, வள்ளியம்மை மலை ஆகிய மலைகளின் நடுவே சோமன் சூரியன் அக்கினி எனும் முச்சுடர்களின் சோதி பெற்று உலகுக்கெல்லாம் பேரொளியாக விளங்குவது கதிரை மலை எனவும், அம்மலையின் சிகரத்தின் நடுவின் அநேக கோடி சூரியப் பிரகாசம் பொருந்தி விளங்கும் சிந்தாமணி ஆலயத்தில் நவரத்தின மயமான சிங்காசனததில் வள்ளிநாயகி தெய் வானையம்மை சகிதம் கதிர்காம கிரீசர் எழுந்தருளியிருக்கிறார் என தக்கண கைலாச புராணம் கூறுகின்றது.

புராணங்களிற் பலவாறாகக் கூறப்பட்ட போதிலும் கதிர்காமசேத்திரன் புராதனமும் பெருமையும் சரித்திரங்களிற் காணப்படுகின்றன. யாழ்ப்பாண வைபவ மாலையிலும் மகாவம்சம் என்ற சிங்கள சரித்திரத்திலும் கதிர்காமத்தைப் பற்றிய உண்மைக் குறிப்புக்கள் காணப்படுகின்றன.

சீதாபிராட்டியாரைத் தேடி இலங்கைக்கு வந்த அநுமான் கதிர்காமப் பெருமானை வணங்கச் சென்றானென்பது சில சரித்திராசிரியர் கொள்கை. கி.மு.500ம் ஆண்டளவில் விஜயன் இலங்கைத் தீவில் கதிரையாண்டவருக்கு ஒரு கோயில் அமைத்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறும். சிங்களரின் சரித்திர நூலாகிய மகாவம்சத்தில், தேவானாம்பியதீசன் ஆட்சிக்காலத்தில், அசோக மன்னனது அருந்தவப்புதல்வி சங்கமித்தை வெள்ளரசுடன் அநுரதபுரியையடைந்த பொழுது, இலங்கை அரசனுக்கு அடுத்தபடியாகக் கஜர காமத்துப் பிரபு குறிப்பிடப்படுகின்றான். இவ் வரசின் கிளையொன்று இப் பிரபுவால் கதிர்காமத்துக்குக் கொண்டுவரப்பட்டு ஆலயத்தில் நாட்டப்பட்டதாகவும் அந்நூல் கூறும். இப்பொழுது கதிர்காமக் கோயில் வீதியிற் காணப்படும் வெள்ளரசு இதனடியிற் தோன்றியதாகக் கருதுவர். கி.மு. 300ம் ஆண்டளவில் மகாநாகன் என்னும் அரசனாற் கட்டப்பெற்ற கிரிவிகாரை என்னும் பௌத்த விகாரம் ஒன்று கதிர்காமக் கோயிலுக்குச் சிறிது தூரத்திலிருக்கின்றது. இதனைச் சாதாரண மக்கள் சூரன்கோட்டை என்று வழங்குவர்.

துட்டகெமுனு எனும் சிங்களவரசன் எல்லாளன் எனும் புகழ்பெற்ற தமிழரசனை வெல்லுதற்குரிய ஆற்றலைத் தமக்களிக்க வேண்டுமெனவும், அளிப்பின் கதிரையாண்டவர் ஆலயத்தைக் கட்டுவிப்பதாகவும் விரதம் பூண்டு அக்கடவுள் அருள் பெற்றுத் தன் பகைவனை வென்றதால் தான் கூறியபடியே கி.மு. 101ஆம் ஆண்டளவில் ஆலயத்தைக் கட்டியதாகவும் கந்தஉபாத எனும் சிங்கள நூல் கூறுகின்றதெனச் சேர் பொன். அருணாசலம் குறிப்பிட்டிருக்கின்றார்.



*1. இல்வாழ்வான் என்பான் இயல்புடைய மூவர்க்கும்*
*நல்ஆற்றின் நின்ற துணை.* 41

இலங்கை சோழர் ஆட்சிக்குட்பட்டபொழுது சிங்கள அரசனாகிய ஐந்தாம் மகிந்தனும் அவன் மனைவிமாரும் சிறைப்படுத்தப்பட்டனர். இங்ஙனம் சிறைப்பட்ட அரசனின் வழித்தோன்றலாய மானவர்மன் எனுஞ் சிறந்த கல்வியாளன் முருகப் பெருமானின் அருள் பெற வேண்டிப் பல்லாண்டு களாகத் தவஞ் செய்த தனது கண்மலரையே அர்ச்சித்து ஈற்றில் அவன் அருளைப் பெற்றுத் தனது சாதியினரை வருத்திய சோழரை இவ்வுரினின்றும் இந்த மானவர்மனின் சந்ததியார் துரத்த முடிந்த தென மகாவம்சம் விரிவாகக் கூறுகின்றது. இவன் சிறந்த முருக பக்தன் என்பதையும் இந்நூல் கூறாமற் கூறிவிட்டது.

இப்பொழுது காணப்படும் கதிர்காம ஆலயம் கி.பி. 1581ஆம் ஆண்டளவில் அரசுபுரியத் தொடங்கிய முதலாம் இராசசிங்கனாற் கட்டப் பெற்றதென்பது திரு.வ.குமாரசுவாமி அவர்கள் கருத்து. இவன் பௌத்த சமயத்தை அலட்சியஞ் செய்து, சைவசமயத்தைக் கடைப்பிடிததொழுகி 'பைரவ ஆண்டி' கோயிலைக் கட்டுவித்தான் என மகாவம்சம் கூறுகின்றது. ஆனால் இப்பொழுது காணப்படும் ஆலயம் கி.பி.1634ஆம் ஆண்டளவில் அரசாண்ட இரண்டாம் இராசசிங்கனாற் கட்டப் பட்டதென்பதே சரித்திர ஆசிரியர் துணிவு.

ஈழநாட்டின் தென்பாகத்தில் ஊவா மாகாணத்து புத்தல பிரிவிலுள்ள தீயனகம எனும் காட்டில் மாணிக்ககங்கை அல்லது பரப்ப ஓயாவின் இடது கரையில் கதிர்காமக் கடவுள் கோயில் கொண்டெழுந்தருளியிருக்கின்றார். இக்கோயில் புத்தலிலிருந்து 26 மைல் தூரத்திலும், அம்பாந் தோட்டையிலிருந்து 59 மைல் தூரத்திலும், திசமஹாராமாவிலிருந்து 10½ மைல் தூரத்திலும் உள்ளது. கதிர்காம சேத்திரத்தில் அநேக கோயில்கள் இருக்கின்றன. கதிர்காமநாதன் சந்நிதி தெற்கு நோக்கியும் வள்ளியம்மன் சந்நிதி வடக்கு நோக்கியும் இருக்கின்றன. தனது புதிய மனைவியை எப்பொழுதும் பார்த்தவண்ணம் இருக்க வேண்டு மென்ற விருப்பினாற் கதிர்காமநாதர் இக் கோயில் களை இங்ஙனம் அமைத்துக் கொண்டார் போலும். இச் செயலைக் கண்ட தெய்வயானையம்மையார் தமது கோயிலைக் கிழக்கு நோக்கி யமைத்துக் கொண்டார். வள்ளியம்மையாருக்கு அடிமை பூண்ட முத்து லிங்கசுவாமி மாணிக்ககங்கையைக் கடந்து வரும் அடியார்களை அன்புடன் உபசரித்து முருகனிடம் ஆற்றுப்படுத்தும் கருத்துடன் மேற்குத் திசையை நோக்கித் தமது கோயிற் சந்நிதியை யமைத்துக் கொண்டார். கதிர்காம சேத்திரத திலுள்ள கோயில்களை நான்கு வகுப்பாக வகைப் படுத்தலாம்: முதலாவது வகுப்பில், (1) உருகுணை மகா கதிர்காம ஆலயம் அல்லது சுவாமி சந்நிதி, (2) வள்ளியம்மை கோயில். (3) பத்தினி கோயில் கண்ணகியம்மன் கோயில் - இவை மூன்றும் அடங்கும். இம் மூன்று கோயில்களும் பௌத்த மத ஆலய பரிபாலனச் சட்டத்தின்படி பரிபாலிக்கப் பட்டு வருகின்றன. இரண்டாவது வகுப்பில் (1) மாணிக்கப்பிள்ளையார் கோயில். (2) தெய்வயானை அம்மன் கோயில். (3) வயிரவர் கோயில் (4) முத்துலிங்கசுவாமி கோயில். (5) செல்லக் கதிர்காமம் அல்லது பழைய கதிர்காமம். அது சுவாமி சந்நிதியிலிருந்து 3 மைல் தூரத்திலுள்ளது. இதன்கண் இப்பொழுது ஒரு பிள்ளையார் கோயிலுண்டு. (6) கதிரை மலை - இவை ஆறும் அடங்கும். இவை பெரும்பாலும் பாபாக்களின் அதிகாரத்தின் கீழ் இருக்கின்றன. மூன்றாவது வகுப்பில் (1) கிரி விகாரையும். (2) பெருமாள் கோயிலும அடங்கும். இவை பௌத்த குருமாரின் பரிபாலனத்தில் இருக்கின்றன. நான்காவது வகுப்பிற் சோனகருடைய பள்ளிவாசல் அடங்கும். இவற்றை விட வேறு சில சிறு கோயில்களும் காலத்துக்குக் காலம் கட்டப்பெற்றுள்ளன.

கதிர்காமநாதன் தேவாலயத்திற் பெரிய கோபுரத்தையாவது விமானத்தையாவது நாம் காண முடியாது. கர்ப்பக்கிரகமும் சிறு மண்டபமும் கொண்டதே கோயில் எனப்படும். கர்ப்பக்கிரகத்தின் வாசலில் திரையிடப்பட்டிருக்கிறது. வெளி மண்டபத்தில் நின்றே மக்கள் வழிபட வேண்டும்.

கதிர்காம வேலருக்குப் பூசை செய்ப வர்களைக் கப்புராளைமார் என்றழைப்பது வழக்கம். கப்புராளைமார் இக்கோயிலிற் பூசை நடத்தும் முறையும் இக்காலச் சைவ முறைக்கு வேறு பட்டதாகும். வள்ளி மணாளனுக்குப் பூசை நிகழும் பொழுது அவனை வரவேற்பதற்கு ஆலாத்திப் பெண்கள் நாடோறும் வந்து ஆலர்த்தியெடுப் பார்கள். கோயிலுக்கு வெவ்வேறு தொழில் புரியும் மேளகாரர், ஜோதிடர் முதலிய பலருளர். இவர்களுக்கெல்லாம் மானியம் விடப்பட்டிருக்கிறது.

*He will be callrd a (true) householder, who is a firm suppot to the virtuous of the three orders in their good path 41*



# வெற்றிலை வீரவேலான சம்பவம்

மகாவித்துவான் நா. கதிரைவேற்பிள்ளை

தேவ இருடி யென்று அரிய நூல்களாற் புகழ்ந்து கூறப் பட்ட சிகண்டி என்னும் அருந்தவ முனிவர் தமிழ்மீது மிக்க ஆர்வ முற்றச் செந்தமிழ்ப் பரமாசாரியராகிய சுப்பிர மணியக் கடவுளைத் தியானஞ் செய்து திருவேங்ட கிரியிற் றவஞ் செய்தார். சடாதரரும் நாகாபரணரும் ஆகிய செவ்வேட் பெருமான். கசநாயகி எனப்படுந தெய்வ யானை யம்மையாரும்,இலவலி நாயகி என்னும் வள்ளி யம்மையாரும் இரு பாங்கரும் பொலிந்து விளங்க, மயில்வாகனா ரூடராய்த் தோன்றி யருளினர். சிகண்டி முனிவர் எழுந்து வணங்கித் துதிபாடி நின்றாராக, பெருமானார் இருடியைத் திருநோக்கம் புரிந்து, "அறவோய்! நின்தவத்தை மெய்ச் சினோம். நினக்க என்ன வேண்டும்? கூறுதி" என்று திருவாய் மலர்ந் தருளினார். முனிவனார் கைம்முகிழ்த்துக் கூறுவார். "கதிரை நாதனே! அடியேற்குத் தமிழியல் யாவுஞ் செவியறிவுறுத் தருளல் வேண்டும்" என்ன சுப்பிரமணியக் கடவுள் திருவாய் மலர்ந்தருள்வார். "இருடியே! தமிழ்மொழியி னியலெலாந் தெளிய வேண்டுமேல், நமது மாணவன் அகத்தியன் பொதியமலைக்க ணிருக்கின்றான். அவனிடஞ் செல்லை யேற் செந்தமிழ் நலனெலாஞ் செவி யறிவுறுத்துவான்" என்று மறைந்தருளினர்.

சிகண்டி முனிவர் அங்ஙனமே சென்று தீந்தமிழ்ப் பாராவாரத்தைப் பருகி. அநாகுலன் என்னுந் தெய்வப் பாண்டியனுக்குந் திலோத்தமைக்கும் பிறந்த சயந்த குமாரன். இசையை யுணர்த்தி யருளல் வேண்டு மென்ற கேட்ப, அவன் அறிதற்காக இசை நுணுக்க மென்னும் நூலை யியற்றித் தெளிவித்தார். அகத்திய

## கதிர்காம யாத்திரை

முற்காலத்தில் கதிர்காம யாத்திரை செய்து அந்தலத்திற்குச் சேரல் அரிது. மனிதசஞ்சாரம்இல்லாதனவும், யானை, புலி, கரடி முதலான கொடிய விலங்குகள் நிறைந்ததும், மனிதரை விழுங்கும் முதலை செறிந்த ஆறுகள் இருப்பதும், பொருளையும் உயிரையும் சூறையாடுபவர்கட்கு இருப்பிடமாகவும் உள்ள காடுகள் பல இருப்பதனாலாகும்.

அதனால் இத்தலத்திற்குச் செல்லும் அன்பு முதிர் முதிரக் கதிரை வேலாயுதக் கடவுள் கனவிற் தோன்றி வருக என்றால் அத்திருவருள் ஆஞ்ஞை பற்றிச் செல்வோர் யாதொரு இடையூறு மின்றிச் சென்று கதிரை நாயகனைத் தொழுது அவனருள் பெற்றுவருவர். அக்டவுளின் ஆணையின்றிச் செல்வோர் பல துன்பங்களுக் காளாகித்திரும்புவர். எனவே மிக்க அன்புடைய பக்குவர் தரிசித்தற்குரியர். இவ்வாறு இருத்தலால் கதிர்காம யாத்திரை காசியாத்திரையிலும் அருமையாத்திரயாம்.

ணாராணையாலும், முனிவர் தம் விருப்பினாலும், கதிரைத் தலமென்னுங்கதிர்காமந் தரிசித்தற்கு விரும்பி அது நோக்கிச் செல்வாராயினார். சிகண்டியார் போகுங் காலத்து அவர் சீடர்களுந் தரிசிக்க விரும்பினர். அவர்களையும் உடன்கொண்டு பிரயாணஞ் செய்தனர். கதிரைத் தலத்திற்குச் சமீபமான வனத்திலே யாணை யொன்று வந்து இவர்களை மறித்துத் தருக்களை முரித்து மதம் பொழிந்து கறுவிக் கொல்ல யத்தனித்தது.

சீடர்களும், மற்றைய பிரயாணிகளுங் சாலவும் அஞ்சி முனிவரடியிற் சேர்ந்து "தேவரீர் காத்தருள்க" என்றனர். அதனை நோக்கிய முனிவரனார், கதிரை வேலாயுதக் கடவுளைத் தம்முள்ளத்தில் தியானித்துச் சடாக்கர மந்திரமுரைத்துச் சமீபத் திலிருந்த வெற்றிலை யொன்றை எடுத்துத் தங்கையிலே தாங்கி,

"ஒரு துரும்பினாலே முன்னர்த் தேவர்களை யெல்லாம் வென்றது உண்மையாயின், அன்னவர் மைந்தராம் அறுமுகக் கடவுள் திருவடியைப் பற்றுக் கோடாக உடையேனானால், இவ்விலையே வேலாகச் சென்று அழிக்குக" என்று கூறி விடுத்தனர். அவ் வெற்றிலை சுப்பிரமணியக் கடவுளின் திருவருளினாலே வேலாகச் சென்று யானையைக் கிழித்துச் சென்றது. யானை வீழ்ந்ததும் ஆங்கிருந்த ஒரு தேவ வுருத்தோன்றி முனிவரை வணங்கி. "ஐயனே! அடியேன் ஐராவசு என்னுமொரு கந்தருவனா யிருந்தேன். பிருகற்பதியாம் வியாழ பகவான் சொல்தவறி நடந்தமையினாற் சாபம் பெற்ற இப்புன் பிறவி யடைந்து நீண்டகாலம் வருத்தமுற்றேன்: குகன் அடியவராகிய தேவரீர் விடுத்த வெற்றிலை, கதிரை வேலாயதக் கடவுளின்




2. துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும்
இல்வாழ்வான் என்பான் துணை. 42

திருவருளாலே வேலாக வந்து உடம்பை உருவிச் சென்றமையால் என்சாபந் தீர்ந்து இத்தெய்வப் பழைய வடிவடைந்தேன். ஆகலாற் குகனடியார் மகிமை கூறவல்லார் யார்?" எனமொழிந்து சென்றது.

முனிவரும் மற்றையாரும் மிக்க வியப்படைந்து, "பத்திர சத்திர மூர்த்தியே! மாணிக்க கங்கைப்பதியே! எனப் பரவிக் கதிரைத்தலஞ் சென்று பெருமானாரை வெளியினின்றுந் தரிசித்து, அவர் திருவுருக்காண விரும்பி வரங்கிடப்ப, இறைவனார் தமது இரகசிய வடிவைக் காட்டத் தரிசித்து வேண்டிய வரம்பெற்றுத் தம் சீடர்களுடன் பொதிய மடைந்தார். இவ்வுண்மையானன்றே புலவர் பலரும் வேற்படையை "**இலைவேல்**" என வியந்து கூறுவாராயினார். தெரியாதார் "இலைத் தொழின் முற்றிய வேல். இலை போலும்வேல்" என வுரைப்பர். இவ்வற்புதத்தைப் புறச்சமயிகளாகிய சமணர் தாமும் தமது நூலிலே வியந்து கூறியுள்ளார். பத்திரம் ~ இலை. சத்தி~வேல், அன்பர் துன்ப நீங்கும்படி அருள் சுரந்து வெற்றிலையை வேலாக்கியதனாற் குமாரக் கடவுள் பத்திரசத்தி மூர்த்தி யாயினர்.

## "கதிர்காம்" பற்றிய நூல்கள்



ஆறமுகம் பிள்ளை, சி.
கதிரமலைப் பதிகம்
கதிர்காம மாலை

இராமச்சந்திரன், க.
கதிர்காமக் காதல் - 1935

இராமசாமியா பிள்ளை,
கதிரேசன் பேரில் ஆனந்தக் களிப்பு - 1895.

இளையதம்பி, அ. க.
கதிர்காம வேலவர் - 1926

கந்தசாமி, பி. எஸ்.
கதிர்காமத்துச் சிவசுப்பிரமணியர் பேரில் பக்தியானந்த பஜனாமிர்தம்

கந்தப்ப சுவாமிகள், சரசுவதி பீடம் (ஈழத்தவர்)
கதிர்காமக் கலம்பகம் - 1897

கந்தையா அடியான்
கதிரைச் சுப்பிரமணியரகவல் - 1926

கந்தையா பிள்ளை, தி. க.
ஸ்ரீ கதிர்காம மகிமை

கருணாலய பாண்டியப் புலவர், சிவங்.
கதிர்காமப் பிள்ளைத் தமிழ் - 1937

காசிநாத சர்மா, த.
கதிர்காம ஸ்வாமி தோத்திரம் - 1932

குமாரசுவாமிப் பிள்ளை, வ.
கதிரை மலைப்பள்ளு - 1935.

சண்முகானந்த சுவாமிகள்
கதிர்காமக் கடவுள் பதிகம்,
தாண்டவம் முதலியன - 1927

சபாநாதன், குல.
கதிர்காமம் - 1947

சிதம்பரநாதன், க.
கதிர்காமக் கண்ணருட் தமிழ்மறை - 1924

சிவஞான தேசிக சுவாமிகள், தருமபுரம்.
கதிர்காம வேலவர் திருவருட்பா.

சிவம், அ. சி.
கதிர்காம மான்மியம் - 1954

செல்லம் உபாத்தியாயர்.
கதிர்காம வேலவர் தோத்திரப் பாமாலை - 1912

செல்லையா, நெ. வை.
கதிர்காம மாலை - 1940.
கதிரை நான்மணிமாலை - 1936

சோமசுந்தர ஐயர், க.
கதிரைமலைப் பேரின்பக் காதல் - 1920

சோமசுந்தரப் புலவர், க.
கதிர்காம வேலவர் பதிகம் - 1921

ஞானபண்டிதன், வ.
கதிர்காம முருகன் - 1939

தாமோதரம் பிள்ளை, சி.
கதிர்காம புராண வசனம் - 1913
கதிர்காம க்ஷேத்திர மான்மியம் - 1905

*He will be said to flourish in domestic virtue*
*who aids the forsaken, the poor, and the dead.* 42



# கதிர்காம பாதயாத்திரை

பேராசிரியர் பொன். சக்திவேல்


ஆதிகாலம் முதல் பரம்பரை பரம்பரையாக காட்டு வழியூடாக நடந்து சென்று (பாதயாத்திரையாக) கதிர்காமக் கந்தனை வழிபடும் மரபு இருந்து வந்துள்ளது. பாத யாத்திரீகர்கள் யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதி ஆலயத் திலிருந்தும், முல்லைத்தீவு வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயத்திலிருந்தும், திருகோணமலை திருக் கோணேஸ்வர் ஆலயத்திலிருந்தும் மட்டக்களப்பில் மாமங்கப் பிள்ளையார் ஆலயத்தில் இருந்தும் காட்டு வழியாக நடந்து செல்வார்கள்.



இவர்களின் பாத யாத்திரைகளின் போது பல வகையான அதிசயங்களையும் அற்புதங்களையும் கதிர்காமக்கந்தன் நிகழ்த்தி பக்தர்களின் உறுதுணையாக நின்று துணைபுரிவார்.

திருகோணமலையிலிருந்து புறப்படும் பாதயாத்திரைக் காரர் அம்பாறையூடாக கதிர்காமக்கந்தன் கொடியேற்ற திருவிழாவுக்கு ஆலயத்தை சென்றடைவார்கள். பத்தாயிரத்திற்கு மேற்பட்ட பக்தர்கள் கதிர்காமத்தை நோக்கி பயங்கரமான காடாகிய யால வனவிலங்கு பகுதியூடாக செல்பவர்கள் கதிர்காமத்தை அடைய நாற்பது நாட்கள் செல்லும். யாழ்ப்பாணம் செல்வச் சந்நிதியூடாக பாதயாத்திரை மேற்கொள்வோர் ஆறுமாத காலமாக பாதயாத்திரையை மேற்கொள்வார்கள். இப்பாதயாத்திரையில் தமிழ் இந்துக்கள் மாத்திரமல்ல வேடர்களும், சிங்கள பௌத்த மக்களும், கிறிஸ்துவரும் முஸ்லிம்கள் மாத்திரமல்ல வெளிநாடுகளில் ஐரோப்பிய, அமெரிக்க வாழ் மக்களும் உதாரணமாக அமெரிக்க பக்தர் திரு. பற்றிக்கான் அவர்கள் பல வருடகாலமாக இப்பாதயாத்திரையில் இணைந்து சென்றுள்ளார்.

பாதயாத்திரை செல்வது மூலம் கதிர்காமக் கந்தனிடம் தங்கள் துயரை வெளிப்படுத்தி இறையருளை பெற்று வீடு திரும்புவதே இதன் நோக்கமாகும். பாதயாத்திரை செல்வோர் வெறுங்காலுடன் கிராமங்களுடாகவும் கரடுமுரடான காட்டுப்பகுதிகளுடாகவும் நடந்து யாத்திரை மேற்கொள்வர்.



கஷ்டங்கள் பலவற்றின் மத்தியிலும் பாத யாத்திரை மேற்கொள்வோர் தொடர்ந்து அதிகமான யாத்திரிகர்கள் கலந்து கொள்வதோடு இவர்களைப் பாதுகாப்பு படையினர் அன்புடன் உபசரித்து அனுப்பி வைப்பார்கள். திருகோணமலையிருந்து 400 கிலோமீற்றர் தூரத்தை பாதயாத்திரையாக செல்லும்போது கடைசி 100 கிலோமீற்றரும் யால தேசியகாட்டுப் பகுதிகளின் அடர்ந்த காடுகள் ஊடாக செல்வது மிகப்பயங் கரமானதாகும். ஆதிகாலத்தில் இப்பாதயாத்திரை செல்வோர் பல சொல்லொணா துயரினை அநுபவித்த போதும் அவர்கள் செல்லும் வழியில் கதிர்காம முருகனே அவர்களை அழைத்து பாதுகாப்பாக செல்வார்கள். பாதயாத்திரை செல்வோர் இரவு நேரங்களை அங்காங்கே தென்படும் கிராமங்களில் தங்கிச் செல்வார்கள், இவர் களை காணும் சிங்கள, தமிழ் அடியார்கள் இவர்களுக்கு உணவுகளை வழக்கி அன்புடன் உபசரிப்பர். அதே போன்று பாது காப்புப் படையினரும் இவர்களை உபசரித்து அன்புடன் பாதயாத்திரை மேற்கொள்ள உதவிபுரிவார்கள்.

பாதயாத்திரை செல்வோர் திருகோணமலை கோணேசர் கோயிலில் இருந்து புறப்பட்டு, வெருகல், சித்தாண்டி, மாமங்கம், தந்தமலை, மண்டூர், திருக்கோவில் ஊடாக கதிர்காமத்தை அடைவார்கள்.

பாதயாத்திரை போன்று அன்னதான மடம், தண்ணீர் பக்தர்களுக்கு ஊற்றுதல் எனும் பணியினை யாழ்ப் பாணத்தின் வடக்கு முனையிலயுள்ள ஜம்பு கோளப் பட்டினத்திலுள்ள ஜம்புகோளலிங்க தீஸ்வர கோயிலை அண்டியுள்ள மக்கள் தெற்கு மூலையிலுள்ள கதிரமலைக்கு செல்லும் பாதையிலும் கதிர்காம ஆலயத்தை யொட்டியும் இப்பணி புரிந்து வந்தனர். இவர்களின் மடமான தம்புச்சுவாமி மடம், காலி சிவதாஸ் சுவாமி மடம், பொன்னம்பல சுவாமிமடம் என்பன குறிப்பிடத்தக்கன.

3. தென்புலத்தார் தெய்வம் விருந்தொக்கல் தானென்றாங்கு
ஐம்புலத்தாறு ஓம்பல் தலை. 43



# திருக்கதிர்காமம்

## திருப்புகழ்

அகரமு மாகி அதிபனு மாகி அதிகமு மாகி அகமாகி
அயனென வாகி அரியென வாகி அரனென வாகி அவர்மேலாய்
இகரமு மாகி எவைகளு மாகி இனிமையு மாகி வருவோனே
இருநில மீதில் எளியனும் வாழ என து முனோடி வரவேணும்
மகபதி யாகி மருவும்வ லாரி மகிழ்களி கூரும் வடிவோனே
வனமுறை வேட னருளிய பூஜை மகிழ்கதிர் காம முடையோனே
செகண சேகு தகுதிமி தோதி திமியென ஆடு மயிலோனே
திருமலி வான பழமுதிர் சோலை மலைமிசை மேவு பெருமாளே.

அலகின் மாறு மாறாத கலதி பூத வேதாளி அடைவில் ஞாளி கோமாளி அறமீயா
அழிவு கோளி நாணாது புழுகு பூசி வாழ்மாதர் அருளி லாத தோடோய மருளாகிப்
பலக லாக ராமேரு மலைக ராச லாவீசு பருவ மேக மேதாரு எனயாதும்
பரிவு றாத மாபாதர் வரிசை பாடி ஓயாத பரிசில் தேடி மாயாத படிபாராய்
இலகு வேலை நீள்வாடை எரிகொள் வேலை மாசூரி லெறியும் வேலைமாறாத திறல்வீரா
இமய மாது பாகீர திநதி பால காசார லிறைவி கான மால்வேடர் சுதைபாகா
கலக வாரி போல்மோதி வடவை ஆறு சூழ்சீத கதிரகாம மூதூரில் இளையோனே
கனக நாடு வீடாய கடவுள் யானை வாழ்வான கருணை மேரு வேதேவர் பெருமாளே.

இறவாமற் பிறவாமல் எனையாள்சற் குருவாகிப்
பிறவாகித் திரமான பெருவாழ்வைத் தருவாயே
குறமாதைப் புணர்வோனே குகனேசொற் குமரேசா
கறையானைக் கிளையோனே கதிர்காமப் பெருமாளே.

எதிரி லாத பத்தி தனைமேவி இனிய தாணி னைப்பை இருபோதும்
இதய வாரி திக்கு ளுறவாகி என து ளேசி றக்க அருள்வாயே
கதிர காம வெற்பி லுறைவோனே கனக மேரு ஒத்த புயவீரா
மதுர வாணி உற்ற கழலோனே வழுதி கூனி மிர்த்த பெருமாளே.

கடகட வருவிகள் தபவரி அதிர்கதிர் காமத் தரங்க மலைவீரா
கனகத நககுலி புணரித குணகுக காமத் தனஞ்சம் புயனோட
வடசிக ரகிரித விடுபட நடமிடு மாவிற் புகுங்கந் தவழாது
வழிவழி தமரென வழிபடு கிலனென வாவிக் கினம்பொன் றிடுமோதான்
அடவியி ருடியபி நவகும ரியடிமை யாயய் புனஞ்சென் றயர்வோனே
அயிலவ சபரிசெய் கவிபுகல் தருகவி யாளப் புயங்கொண் டருள்வோனே
இடமொரு மரகத மயிலிசை வடிவுள ஏழைக் கிடங்கண் டவர்வாழ்வே
இதமொழி பகரினு மதமொழி பகரினு மேழைக் கிரங்கும் பெருமாளே.


*The chief (duty of the householder) is to preserve the five-fold rule (of conduct) towards the manes, the Gold, his guests, his relations, and himself.* 43



கலையிலே மைக்கண் விழியிலே பெற்ற குருதிநே ரிட்ட விதழ்மானார்
குழையிலே தெற்று நடையிலே நெய்க்கொள் குழலிலே பற்கள் தனிலேமா
முலையிலே அற்ப இடையிலே பத்ம முழுநிலா வட்ட முகமீதே
முதுகிலே சுட்டி நுதலிலே இக்கு மொழியிலே சிக்கி விடலாமோ
தலைவனே முத்தி முதல்வனே துட்டர் இகலனே நித்தம் இளையோனே
சதுரனே பித்தர் புதல்வனே மெச்சி சரவணா செச்சை முருகோனே
உலகனே மிக்க கதிருகா மத்தில் ஒருவனே விஷ்ணு மருகோனே
ஒயிலனே பச்சை மயிலனே சித்ர உருவனே பத்தர் பெருமாளே.

குடலிடை தீதுற் றிடையிடை பீறிக் குலவிய தோலத் தியினூடே
குருதியி லேசுக் கிலமது கூடிக் குவலயம் வானப் பெரிகாலாய்
உடலெழு மாயப் பிறவியி லாவித் துறுபுணி நோயுற் றுழலாதே
உரையடி யேனுக் கொளிமிகு நீபத் துனதிரு தாளைத் தரவேணும்
கடலிடை சூரப் படைபொடி யாகக் கருதல ரோடப் பொரும்வேலா
கதிர்விடு வேலைக் கதிரினில் மேவிக் கலைபல தேர் முத் தமிழ்நாடா
சடையினர் நாடப் படர்மலை யோடித் தனிவிளை யாடித் திரிவோனே
தனிமட மானைப் பரிவுட னாரத் தழுவும்வி நோதப் பெருமாளே.

சமரமுக வேலொத்த விழிபுரள வாரிட்ட
தனமசைய வீதிக்குள் மயில்போலுலாவிய
சரியைக்ரியை யோகத்தின் வழிவருக்கு பாசுத்தர்
தமையுணர ராகத்தின் வசமாகமேவியே
உமதடி னாருக்கு மனுமரண மாயைக்கு
முரியவர்ம காதத்தை எனுமாயமாதரார்
ஒளிரமமளி பீடத்தி லமடுபடு வேனுக்கு
முனதருள்க்ரு பாசித்தம் அருள்கூரவேணுமே
இம கிரிகு மாரத்தி அநுபவைப ராசத்தி
எழுதரிய காயத்ரி உமையாள்குமாரனே
எயினர்மட மானுக்கு மடலெடுதி மோகித்து
இதணருகு சேவிக்கு முருகாவிசாகனே
அமரர்சிறை மீள்விக்க அமர்செய் துப்ர தாபிக்கு
மதிகவித சாமர்த்ய கவிராஜராஜனே
அழுதுலகை வாழ்வித்த கவுணியரு லாதித்த
அரியகதிர் காமத்தில் உரியாபிரமனே.



4. பழிஅஞ்சிப் பாத்தூண் உடைத்தாயின் வாழ்க்கை
வழிஅஞ்சல் எஞ்ஞான்றும் இல். 44

சாயையா ளர்க்குமக் கிரியையா ளர்க்குநற் சகலயோ கர்க்குமெட் டரிதாய
சமயபே தத்தினுக் கணுகொணா மெய்ப்பொருட் டருபரா சக்தியுட் சிவமாகித்
துரியமே லற்புதப் பரமஞா னத்தினிற் சுடர்வியா பித்தநற் பதிநீடு
துகளில்சா யுச்சியக் கதியையீ றற்றசொற் சுகசொரூ பத்தையுற் றடைவேனோ
புரிசைசூழ் செய்ப்பதிக் குரியசா மர்த்தியப் புருஷவீ ரத்துவிக் ரமசூரன்
புரளவேல் தொட்டகைக் குமரமேன் மைத்திருப் புகழையோ தற்கெனக் கருள்வோனே
கரியயூ கத்திரட் பலவின்மீ திற்சுளைக் கனிகள்பீ றிப்புசித் தமராடிக்
கதலிசூழ் தெற்றிசைப் பயிலுமீ ழத்தினிற் கதிரகா மக்கிரிப் பெருமாளே.

திருமகளு லாவு மிருபுயமு ராரி திருமருக நாமப் பெருமாள்காண்
செகதலமும் வானு மிகுதிபெறு பாடல் தெரி தருகு மாரப் பெருமாள்காண்
மருவுமடி யார்கள் மனதில்விளை யாடு மரகதம யூரப் பெருமாள்காண்
மணிதரளம் வீசி அணியருவி சூழ மருவுகதிர் காமப் பெருமாள்காண்
அருவரைகள் நீறு படவசுரர் மாள அமர்பொருத வீரப் பெருமாள்காண்
அறுகுபிறை வாரி விரவுசடை யீசர் அருள்செய்குரு நாத பெருமாள்காண்
இருவினையி லாத திருவினைவி டாத இமையவாகு லேசப் பெருமாள்காண்
இலகுசிலை வேடர் கொடியினதி பார இருதனவினோதப் பெருமாளே.

மருவறா வெற்றி மலர்தொடா விற்கை வலிசெயா நிற்கு மதனாலும்
மதில்கள்தா வுற்ற கலைபடா வட்ட மதிசுடா நிற்கு மதனாலும்
இருகணால் முத்த முதிரயா மத்தி னிரவினால் நித்த மெலியாதே
இடருறா மெத்த மயல்கொளா நிற்கு மிவளைவாழ் விக்க வரவேணும்
கரிகள்சேர் வெற்பி லரியவே டிச்சி கலவிகூர் சித்ர மணிமார்பா
கனகமா ணிக்க வடிவனே மிக்க கதிரகா மத்தில் உறைவோனே
முருகனே பத்த ரருகனே முத்தி முதல்வனே பச்சை மயில்வீரா
முடுகிமே லிட்ட கொடியசூர் கெட்டு முறியவேல் தொட்ட பெருமாளே.

மாதாவச மாயுற் றுழல்வாரும் மாதவமெ ணாமற் றிரிவாரும்
தீதகல வோதிப் பணியாரும் தீநகர மீதிற் றிகழ்வாரே
நாதவொளி யேநற் குணசீலா நாரியிரு வோறைப் புணர்வேலா
சோதிசிவ ஞானக் குமரேசா தோமில்கதிர் காமப் பெருமாளே.

*His descendants shall never fail who, living in the domestic state, fears vice (in the acquisition of property) and shares his food (with others)* 44



# நக்கீரனார் வரலாறு

பாண்டி நன்னாட்டு மதுரையம்பதியிலே அங்கயற் கண்ணியம்மையாரோடு அமர்ந்தினி திருக்கும் சோமசுந்தரக் கடவுள் அருளிய சங்கப்பலகையிலிருந்து கடைச்சங்ககாலத்திலே தமிழாராய்ந்த நல்லிசைப் புலவர்பெருமக்கள் நாற்பத் தொன்பதின் மருள்ளும் தலைவராய் வீற்றிருந்தவர் நற்றமிழ்வல்ல நக்கீரனாவர். இவரது இயற்பெயர் கீரன் என்பது. இவர் நுண்மாண் நுழைபுலமுடையராய் உயரிய ஒழுக்கம் நிரம்பப் பெற்றவராய் விளங்கியமையைக் கண்ட அறிஞர், சிறப்புப் பொருள் தரும் நகரவிடைச் சொல்லும் "ஆர்" விகுதியந்தந்து நக்கீரனார் என அழைப்பாராயினர். சீவக சிந்தாமணியில் வரும் "குலநினையல் நம்பி' என்னும் செய்யுளுரையில் 'நப்பின்னை" என்னும்பெயரை விளக்குமிடத்து, 'பின்னை~அவள்பெயர்: ந, சிறப்புப் பொருளுணர்த்துவ தோர் இடைச்சொல்' நச்செள்ளை, நப்பாலத்தன், நக்கீரன் என்றாற்போல' என நச்சினார்க் கினியர் கூறியிருத்தல் காண்க. இவர் தந்தையார் கணக்காயனார் என்பதும் அவரது இடம் பீடு மிக்க மாடமதுரை என்பதும் 'மதுரைக் கணக்காயனார் மகனார் நக்கீரனார்' என வழங்க மாற்றான் அறியப் படும். இவர் மகனார் கீரங்கொற்றனாராவார். இது 'மது ரைக் கணக்காயனார் மனகார் நக்கீரனார் தம் மகனார் கீரங் கொற்றனார்க் குரைத்தார்' எனவரும் இறையனார் அகப் பொருள் உரையான் இனிது புலனாகும். நக்கீரனார் அந்தண வருணத்தனர் என்பது "கீதவிசை கூட்டி வேதமொழி சூடடு கீரர்" என அருணகிரிநாதர் அருளியவாற்றான் அறியப்படும். இவர் சைவசமயத் தினராவர் என்பது,

"தரணியிற்பொய்ம்மை யிலாத்தமிழ்ச்சங்க மதிற்கபிலர்
பரணர் நக்கீரர் முதனாற்பத் தொன்பது பல்புலவோர்
அருணமக்கீயுந் திருவாலவாயரன் சேவடிக்கே
பொருளமைத் தின்பக் கவிபல பாடும் புலவர்களே"

என்னும் நம்பியாண்டார்நம்பி திருவந்தாதியினாலே அறியப் படும்.

இவர் சங்கத்து வைகும் நாளில் வடமொழியிலே வல்ல 'கொண்டான்' என்னும் குயவன் பட்டி மண்டபம் புகுந்து 'வடமொழி சிறந்தது தென்மொழி இழிந்தது என்று தமிழ் மொழியினை இழித்துக் கூறினான். அதனைக் கேட்ட நக்கீரனார். 'தமிழ்மொழியினை இழித்துக் கூறிய இவனை இப்பொழுதே இறக்குமாறு செய்வல்' என்று,

"முரணில் பொதியின் முதற்புத்தேள் வாழி
பரண கபிலரும் வாழி -- அரணிலா
ஆனந்த வேட்கையான் வேட்கோக் குயக்கொண்டான்
ஆனந்தஞ்சேர்க் சுவாகா"

என்னும் வெண்பாவைக் கூறலும் அவன் அவ்விடத்தே வீழ்ந்துஉயிர் நீங்கினன். அதனைக்கண்டு அருகிருந்தமற்றையோர் வந்து இவரை வேண்டிக் கொள்ள இவர் அவர்களுடைய வேண்டுகோட் கியைந்து,

"ஆரிய நன்று தமிழ்தீ தெனவுரைத்த
காரியத்தாற் காலக்கோட் பட்டானைச் -- சீரிய
அந்தண் பொதியி லகத்தியனா ராணையினாற்
செந்தமிழே தீர்க்க சுவாகா"

என்று ஒரு வெண்பாவைப் பாடுதலும் அவன் உயிர்பெறறெழுந்தான். இச்செய்யுட்களை எடுத்துக் காட்டி "இவை தெற்கில் வாயில் திறவாத பட்டி மண்டபத்தார் பொருட்டு நக்கீரர் ஒருவன் வாழவும் ஒருவன் சாகவும் பாடிய மந்திரம் அங்கதப் பாட்டாயின" என்று தொல்காப்பியச் செய்யளியற் சூத்திரவுரையின் கண்ணே பேராசியரும் நச்சினார்க்கினியரும் இச் செய்தியைக் குறிப்பிட்டமை காண்க.

இனி இவர்பாடிய செய்யட்கள் பத்துப் பாட்டுள் இத் திருமுருகநற்றுப்படையும் நெடுநல்வாடையுமாம். தொகை நல்களுள் நற்றிணையில் ஏழுசெய்யுட்களும் குறுந்தொகையில் எட்டும் அகநானூற்றில் பதினேழும் புறநானூற்றில் மூன்றும் இவர் இயற்றினவாகக் காணப்படுகின்றன. திருவள்ளுவ மாலையில் 'தானே முழுதுணர்ந்து" என்னுஞ் செய்யுளும் இவரால் இயற்றப் பட்டதாகும். பதினோராந்திரு முறையில் திருமுருகாற்றப்



5. அன்பும் அறனும் உடைத்தாயின் இவ்வாழ்க்கை
பண்பும் பயனும் அது. 45

படையன்றி ஒன்பது பிரபந்தங்கள் இவரால் இயற்றப் பட்டனவாகும். அவை: கைலை பாதி காளாத்திபாதி யந்தாதி, திருவீங்கோய்மலையெழுபது, திருவலஞ்சுழி மும்மணிக்கோவை, திருவெழுகூற்றிருக்கை, பெருந் தேவபாணி, கோபப்பிரசாரம், காரெட்டு, போற்றித் திருவகவல், கண்ணப்பதேவர் திருமறம் எண்பனவாகும். இறையனாரகப்பொருளுக்கு முதலில் நல்வுரை கண்டவர் இவரே. இவரது பாடல்கள் இயற்கையைத் தெரிவிப்பன வாய், சொல்வளம்பொருள்வளம் மிகுந்து, கற்போர் நெஞ்சங் கவர்ந்து, இகபரமிரண்டும் நல்கி விளங்கு கின்றன. இவரது அளப்பரும் பெருமையை "பொய்யற்ற கீரன் முதலாம் புலவோர் புகழ்ந்த ஐயற் கெனது சிறுசொல்லும் ஒப்பாகும்" எனக் கச்சியப்ப சிவாசாரிய சுவாமிகளும் பாராட்டி யிருத்தல் காண்க.

திருப்பரங்குன்றத்தில் ஸ்ரீ முத்துக்குமாரசுவாமியின் பக்கத்தே இவருடைய திருவுருவம் அமைக்கப்பட்டுள்ளது. மதுரையில் மேலைமாசி வீதியின் மேல்சிறகில் இவருடைய கோயிலொன்றுள்ளது. அது சங்கத்தார் கோயிலெனவும் வழங்கும். திருக்காளாத்தியில் நக்கீரராற் பிரதிட்டிக்கப் பட்டதாகக் கூறப்படும் ஒரு சிவலிங்கப் பெருமான் திரு வுருவம் உண்டு.

☆

## செல்வம் வந்தால் மனிதரின் இயல்பு

*செல்வம் வந்துற்ற போது*
*தெய்வமும் சிறிது பேணார்;*
*சொல்வதை அறிந்து சொல்லார்;*
*சுற்றமும் துணையும் பேணார்;*
*வெல்வதே கருமம் அல்லால்*
*வெம்பகை வலிதுஎன்று எண்ணார்;*
*வல்வினை விளைவும் பாரார்;*
*மண்ணின்மேல் வாழும் மாந்தர்;*

இந்த வுலகத்தில் வாழும் மக்கள் தமக்கு மிக்க செல்வம் வந்து சேர்ந்துவிட்டால் தெய்வத்தைச் சிறிதும் எண்ணிப் பார்க்க மாட்டார்; தாம் சொல்வதை இன்னது என அறிந்து சொல்ல மாட்டார்; தம் உறவினரையும் நண்பரையும் பொருட்படுத்த மாட்டார். எப்போதும் அவர்கள் வெற்றிச் செயலையே எண்ணுவது அல்லால் கொடிய பகைவர் வல்லவர் என்ற எண்ணிப் பார்க்கமாட்டார். வலிய பாவத்தின் விளைவையும் நினைத்துப் பார்க்க மாட்டார்.

## படித்தவர் பண்பு

வால் முறையால் வந்த நான் மறையாளரை
மேல் முறைப்பால் தம் குரவரைப் போல் ஒழுகல்
நூல் மறையாளர் துணிவு.

**தூய நல்லொழுக்க நெறியில் வந்த நான் குமறை உணர்ந்த, அந்தணரை, மேலேற்றிப் போற்றத் தக்க, பெரியோர்களை மதித்துப் பாராட்டுவது போல்; பாராட்டி, அன்புடன் நடத்துவச படித்தறிந்த பண்புடையவர் செயலாகும்.**

**வால்-தூய;**
**நூல்-புத்தகம்;**
**முறை- ஒழுங்க**

*If the married life possess love and virtue, these will be both its duty and reward.* 45



# காரி நாயனார்

— சிவ: சண்முக வடிவேல்

திருக்கடவூர் என்னும் பதியில் மறையவர் மிகுதியாக நடமாடுவர். காரி என்பார் அத்திருப்பதியில் வந்து உதித்தார். அவர் வளமான செந்தமிழின் பயன் நன்கு உணர்ந்தவர். தமது பெயரால் காரி கோவை என்னும் நூலை நூலைத் தொகுத்து இயற்றினார். காரியார் செய்யுளில் எளிதாகப் புறத்தே சொல் விளங்கும். சொல்லினுள் பொருள் அரிதாக மறைந்து காணப்படும்.

காரியார் மன்னவர்களோடு மகிழ்ந்து உறவாடுவார். அரசர்கள் அதிசயிக்கும் படியாக பொருளிற் பொருத்தமான சொற்களை நலம்பெற மொழிவார். மணம் கமழும் மாலை அணிந்த மன்னவரிடத்தில் செல்வத்தைக் குவியலாகப் பெற்றுக் கொள்வார். காரியார் செல்வத்துப் பயனாக, அச்சத்தைத் தரும் கண்கொண்ட அரவுடன் விளங்கும் இளம்பிறை அணிந்த சென்னியர் – சங்கரனார் இனிது மிகழ்ந்து வீற்றிருந்து அருளும் ஆலயங்கள் பல அமைப்பார்.

காரியார். யாவரும் மனம் மகிழும் இனிய வார்த்தைகளை எடுத்த இயம்புவார். மகாதேவரிடத்தில் மறவாத மனமுடைய அடியவர்களுக்குப் பெரு நிதியம் மிக அளிப்பார்.

இறையவர் இடபவாகனர். அவர் எழுந்தருளி இருக்கும் திருக்கயிலாயம் சோலைகள் சூழப் பெற்றது. காரியார் கயிலையைக் கணப்பொழுதும் மறவாத கருத்துடையவராகக்கடமைகளைக்கவனிட்டார்.

காரியார் கடல் சூழ்ந்த காசினியில் காணும் இடம் எங்கும் தமது புகழினை நிலை நிறுத்தினார். காரியார் தத்துவங்களை ஆராய்ந்து தெளிந்த உணர்வினால் சிவ பெருமானிடத்தில் பேரா அன்பு பெருக்கினார்.

காரியார் கங்கைநதி தோய்ந்த நீண்ட சடாமுடிப் பெருமானுடைய திருவருள் தொடர்பு உடையவரானார். காரியார் மனம் போல வாழ்வு பெற்றார். உடம்பும் கயிலை மலை சேர்ந்தார்.

'வேரியார் மலர்க்கொன்றை வேணியா ரடிபேணும் காரியார் வாய்ந்த மனம் போல் உடம்பும் வட கயிலை சேர்த்ததனை, தொண்டத் தொகை விரிகள் தொல்லோன் அருண் முதலைக் கொண்டெழுந்த தெய்வத் தமிழ் கூறும் தெய்வத் தமிழன் தெவிட்டாத செய்யுள் சுவை இன்பம் அறிவிற்கு என்றும் இன்பம் பெருக்கும் இயல்பினது:


'எய்ந்தகடல் சூழலகி லெங்குந்த மிசைநிறுத்தி
ஆய்ந்தவுணர் விடையார வன்பினரா யணிகங்கை
தோய்ந்த நெடுஞ் சடையார்த மருள்பெற்ற தொடர்பினால்
வாய்ந்தமனம் போலுடம்பும் வடகயிலை மலைசேர்ந்தார்'



6. அறத்தாற்றின் இல்வாழ்க்கை ஆற்றின் புறத்தாற்றில்
போஒய்ப் பெறுவது எவன். 46

உ

சிவமயம்



# அருமந்த அரசாட்சி

வித்துவான். வ. செல்லையா

பாரத நாட்டின் தென்பகுதி தமிழ்நாடு. சிதம்பரம், காஞ்சி புரம் முதலாய பல சிவஸ்தலங்கள் உடைமையால் தமிழ்நாடு சிறந்து விளங்குகின்றது. தமிழ் நாடடிலும் சோழ மண்டலம் சிறப்புடையது. அகத்திய முனிவரின் கமண்டல நீரை விநாயகப்பெருமான் காகவடி வாகிக் கவிழ்ப்பக் காவிரியாகப் பெருகுகின்றது. காவிரியாகிய ஜீவ நதி ஓடுவதால் சோழ நாடு சிறப்புடைத்து.

இச் சோழ மண்டலத்தை ஐந்து இராசதானிகள் அமைத்து அரசாண்டவர்கள் சோழ மன்னர்கள். அவ் இராசதானிகளில் ஒன்று திருவாரூர். திருவாரூரில் இருந்து அரசியற்றிய அரசர்களில் முதன்மையானவர் மனுநீதி கண்ட சோழன் ஆவார். அவர் உயிர் களுக்கெல்லாம் கண்ணும் உயிரும் போன்றவர். அங்கெழுந்தருளி அருள்பாலித்து வரும் வான்மீக நாதருக்கு நிவந்தம் அமைத்துச் சிவாகம விதிப்படி பூசை முதலியவைகளை வழுவாது பக்தி சிரத்தை யோடு நடாத்துவித்தார்.

அவர் நல்லரசாட்சி செய்யும் நாளில், அவர் செய்த சிவபுண்ணிய வசத்தால் அவருக்கு ஒரு சற்புத்திரன் அவதரித்தான். அவன் பல கலைகளையுங் கற்று வல்ல வனானான். அத்தோடு அறிவொழுக்கங்களிலும் சிறந்து விளங்கினான். இளவரசாவதற்கு ஏற்ற பருவமடைந்த போது ஒருநாள், அரசுலாம் தெருவீதியில் உலாச் செல்ல விரும்பினான். இராச குமாரர்களும் சேனைகளும் புடை சூழத் தேர் ஏறி உலா வந்தான். அங்ஙனம் செல்லும் போது வீதியிலே ஒரு பசுக்கன்று துள்ளிக் கொண்டு தேர்ச்சில்லில் அகப்பட்டு இறந்து விட்டது.

அது கண்ட தாய்ப்பசு ஓடிவந்து அலறிச் சோர்ந்து நடுங்கி விழுந்தது. இதனைக் கண்ட இளவரசன் பழி வந்ததே என்று தடுமாற்ற மடைந்து துயரத்தால் தேரின்றும் நிலத்தில் வீழ்ந்தான். பின்னர் எழுந்து தாய்ப் பசுவின் நிலை கண்டு உயிர் பதைத்துச் சோருவான் இறந்து கிடக்குங் கன்றைப் பார்த்துப் பெருமூச்சு விட்டு இரங்கி நிற்பான் நானொருவன் பிறந்தது என்னுடைய தந்தைக்கு இப் பழிவந்து வந்து சேர்வதற்கோ என்று கூறுவான். எனக்கு அறியாமற் செய்த இப் பாவத்துக்குப் பிராயச்சித்தம் உளதாயின் தந்தையார் அறிய முன்னர் செய்யவேண்டுமென்று கருதிப்பிராமணர்களிடம் சென்றான்.

கன்றை இழந்த பசு துயரந் தாங்காது கண்ணீர் சோரத் தெருவீதியில் அலறிச்சென்று, அரச மாளிகையின் முன் கட்டப்பட்ட ஆராய்ச்சி மணியினைத் தன் கொம்பினால் அசைத்து அடித்தது. மணியோசை கேட்ட சோழ மன்னர் சிங்காசனத்தினின்றும் இறங்கினார். விரைந்து வாயிலையடைந்தார். வாயிற் காவலர் எதிர் வந்து வணங்கி, மகாராசாவே இங்கே ஒரு பசு வந்து ஆராய்ச்சி மணியை தன் கொம்பினால் அடித்து நிற்கிறது என்று விண்ணப்பஞ் செய்தார்கள். அது கேட்ட அரசன் வருத்தமுற்று நிற்கும் பசுவைப் பார்த்து இப்பசுவுக்கு யாது இடையூறு நிகழ்ந்து என்று மந்திரிகளைக் கோபத்துடன் கேட்டான். மந்திரிகளில் ஒருவர் மகாராசாவே. தங்கள் மகன் இன்று அரச வீதியில் தேர் மீது உலாச் சென்றனர். இப்பசுவின் கன்று தன் பாட்டுக் கோடித் தேர்ச்சில்லில் முட்டி இறந்தது. அதனால் வருத்தமுற்ற தாய்ப்பசு ஆராய்ச்சி மணியை யடித்தது என்று கூறி வணங்கி நின்றார்.

அது கேட்ட மன்னன் பெருந் துயரடைந்து இரங்கி ஏங்கி "என் செங்கோன் முறை நன்று நன்று" என்று கூறி நிற்பார். "இது யாது செய்தாற் தீரும்" என்பார் கன்றையிழந்த தாய்ப்பசு வின் முகத்தைப் பார்த்துச் சோர்வார். மந்திரிகள் அது கண்டு சோழ அரசரை வணங்கி நின்று "மகாராசாவே, இதற்கு மனம் வருந்துவது பரிகாரமாகாது. உம்முடைய புத்திரனைக் கொண்டு பசு வதைக்குத் தரும நூல்களிலே சொல்லப் பட்ட பிராயச் சித்தத்தைச் செய்விப்பதே தருமம்" என்று கூறினார்கள். அதற்கு அரசன் நீங்கள் கூறும் பிராயச் சித்தம் கன்றை இழந்த பசுவின் நோய்க்கு மருந்தாகுமா நான் ஏக புத்திரனை இழக்கின் றேன் என்று கருதி இப்படிக் கூறிய வார்த்தைக்கு இசைந்தேன் ஆயின் நடுவு நிலை தவறாதா? சிந்தித்துப் பாருங்கள்.

ஓர் அரசன் உயிர்களுக்கு வரும் ஐந்து வகைப் பயங்களும் தீர்த்து அரசாள வேண்டியவனாவான். அவையாவன:-

"மாநிலங் காவலனாவான் மன்னுயிர் காக்குங் காலைத்



*What will be who lives virtuously in the domestic state gain by going into the other state?* 46

தானதனுக் கிடையூறு தன்னால் பரிசனத்தால்
ஊனமிகு பகைத் திறத்தால் கள்வரால் உயிர் தம்மால்
ஆன பயம் ஐந்துந் தீர்த்தறங் காப்பான் அல்லனோ"
(தி. தொ. பு)

என்று கூறி மந்திரிமாரைக் கடிந்தான். என் மகன் செய்த பாதகத் துக்குப் பிராயச்சித்தம் செய்து பரிகாரம் தேடுவதும் பிறனொருவன் மகன் ஒருயிரைக் கொன்றால் அவனைக் கொலையும் செய்வேனானால் என் நீதி என்னாம். தொன்மையான மனுநீதி இந்த மனுநீதி கண்ட சோழ மன்னனால் அழிக்கப்பட்டது என்று உலகோர் கூறும் பழிச்சொல்லுக்கு ஆளாக்கவோ இவ் வார்த்தை களைக் கூறினீர்கள். நன்று! நன்று! நும் வார்த்தை என்று சோழ மன்னன் சினந்து நின்றான். பண்டைக் கால நெறி முறையில் முன் நிகழ்ந்த சம்பவத்துடன் ஒத்துப்பார்த்து அதனைப்போல் இன்றும் செய்தல், "மறை மொழிந்து அறம் புரிதல் வழங்கு" என்று மதியுடை அமைச்சர்கள் மன்னனின் மனங்கொள்ளக் கூறி வேண்டி நின்றனர்.

அவ்வண்ணம் தொழுதுரைத்த மந்திரிமாரை மன்னன் முகம் மலர்ந்து பார்த்தான். நீங்கள் தரும நெறியின் உண்மையைச் சிறிதும் உணராது கூறினீர்கள் எந்த உலகத்தில் எந்தப் பசு கன்றை இழந்த துயரத்தில் ஆராயச்சி மணியை அடித்தது! சொல்லுங்கள். அன்றியும் சிவபெருமான் எழுந்தருளி யிருந்து அருள்பாலித்துக் கொண்டிருக்கும் திருவாரூரில் ஓர் உயிரைக் கொன்றானே அவனைக் கொல்லுதலே முடிந்த முடிவு என்று சிந்தி யுங்கள். நான் இப் பசுவின் துயரத்தை நீக்க வல்லவன் அல்லேன். ஆதலின் நானும் என் மகனை இழந்து "ஆவுறு துயரமெய்தலே" நீதியாகும் என்று கூறி, எவ் விடத்தும் எவராலும் சாதிக்க முடியாத செயற் கரும் செயலைச் செய்யத் ததுணிந்தார். மந்திரிகள் அஞ்சி அகன்றனர்.

மனுநீதி கண்ட சோழர் தன் மைந்தனை அங்கு வரவழைத்தார் ஒரு அமைச்சரைப் பார்த்து "நீ இந்தப் பிள்ளையை வீதியிலே படுக்க வைத்து அவனைத் தேர்ச் சில்லால் நெரித்து இறக்கச் செய்யக் கடவை" என்று பணித்தார்.

"தன்னுயிர் நீப்பினுஞ் செய்யற்கதான்பிறி
தின்னுயிர் நீக்கும் வினை" என்ற தேவர்

குறளின்படி அமைச்சர் அகன்று தன்னுயிரை விடுத்தார். அதனைக் கண்ட மனுநீதி கண்ட சோழர் தம் புத்திரனைத் தானே அழைத்து வீதியில் படுக்க வைத்து அவன் மார்பின்மீது தேரை ஊர்ந்து இறக்கச் செய்தான். அவன் ஒரே மைந்தன் தன் குலத்துக் குள்ளான் என்பதையும் சிந்திக்கவில்லை. தரும வழியிலே நடத்தலே சிறந்த தென்று அங்ஙனம் மன்னன் செய்தமை இன்றும் மானிலம் எல்லாம் அவனைத் தெய்வத்தில் வைத்து போற்றுகின்றது.

"திரு மைந்தன் தன் குலத்துக்கள்ளா னென்பது முணரான்
தருமந்தன் வழிச்செய்கை கடனென்று தன் மைந்தன்
மருமந்தன் தேராழி உற ஊர்ந்தான் மனு வேந்தன்
அருமந்த அரசாட்சி அரிதோ மற்றெளிதோ தான்"
(தி. தொ. பு)

அரசாளுவது என்பது அரிதுதான். எளிதல்ல என்று நாம் உணர்தல் வேண்டும். தன்னுயிர் போல் மன்னுயிரையும் நேசிக்கும் பண்பு வேண்டும். மன்னுயிர்களுக்கு வரும் பயங்களை அறிந்து அகற்றாது அரசாளும் நாட்டில் வாழுதலிலும் கடும் புலி வாழும் காடு நன்று என்பது அறிஞர் கருத்து.

மனுநீதி கண்ட சோழனின் இச் செயலைக் கண்டு மனிதர்கள் கண்ணீர் சோர நின்றழுதனர். தேவர்கள் பூமாரி பொழிந்தனர். சர்வலோக நாயகரான தியாகேசர் தேவர்களும் பூதகணங்களும் புடைசூழ இடபாரூடராக எழுந்தருளி வந்து முன்னின்றார். மனு நீதி கண்ட சோழர் எம் பெருமானைத் தரிசித்து வணங்கிப் பேரானந்தப் பெருங்கடலில் மூழ்கினார். அந்நிலையே பசுக்கன்றும், மன்னுருமைத் தனிக்கன்றும், மந்திரியும் உயிர் பெற்று உடன் எழுதலும் அது கண்ட சோழ அரசர் தாம் இத்தன்மையரென்று அறியாதவரானார். அவர் தமது பாதத்தில் வந்து வணங்கி நின்ற புத்திரனை அணைத்து மனமகிழ்ந்தார். பசு தன்னை எணைத்து கன்றுக்குப் பால் சுரந்து கொடுத்துத் தன் துன்பம் நீங்க ஆனந்தம் கொண்டது தியாகேசப் பெருமான் மனுநீதி கண்ட சோழருக்குத் திருவருள் செய்து மறைந்தருளினார்.

"தண்ணளி வெண்குடை வேந்தன் செயல் கண்டு தரியாது
மண்ணவர் கண் மழை பொழிந்தார் வானவர் பூ மழை சொரிந்தார்
அண்ணலவன் கண்ணெதிரே அணிவீதி மழவிடை மேல்
விண்ணவர்கள் தொழ நின்றான் வீதி விடங்கப்பெருமான்."
(திருத்தொண்டர் புராணம்)

7. இயல்பினான் இல்வாழ்க்கை வாழ்பவன் என்பான்
முயல்வாருள் எல்லாம் தலை. 47



# சிவஞானியின் சிறப்பு

**திருமுருக கிரிபாணந்த வாதியார் சுவாமிகள்,**

"எரியாற் சுடப்படினும் உய்வுண்டாம் உய்யார்
பெரியார்ப் பிழைத்தொழுகி வார்" - திருக்குறள் - 896

**த**ருமபுரம் ஆதீனத்தை முதன் முதலாகத தோற்றுவித்த குருமூர்த்தி குருஞான சம்பந்த சுவாமிகள். இவர்களது ஞான பரம்பரையில் 7அவது ஆச்சாரிய மூர்த்திகளாக வந்தவர்கள் திருவம்பல தேசிகர் அவர்கள். சிவஞான தீபமாய் விளங்கிய இவர்கள், தம்மையப்படுத்த சீடர் களுடைய மலமாயா கன்மங்களை நீக்கிச் சிவஞானச் செல்வத்தை வழங்கி வந்தார்கள்.

வேலூர்ச் சுப்பராயச் செட்டியார் என்பவர் காலஞ் சென்ற தாயாருக்குச் செய்ய வேண்டிய இறுதிச் சடங்குகளைச் செய்து விட்டுத், திருவம்பல தேசிகா பால் வந்தூர் வணங்கி, "தாயாருக்கு வீடுபேறு கிடைக்குமாறு அருள் புரிய வேண்டும்" என்று விண்ணப்பஞ் செய்தார். ஞான மூர்த்திகள், தமது ஞான நோக்கினால் அந்தச் செட்டியாருடைய தாயின் உயிர் அவருடைய மனைவி வயிற்றில் கருவுற்றிருப்பதனை அறிந்து, செட்டியாரைப் பார்த்து, "உமக்குத் தாய் வீடுபேறு பெறுதல் வேண்டுமா?" மகப்பேறு வேண்டுமா? என்று வினாவியருளினார்கள். செட்டியார், "தாயின் வீடுபெறு தான் இப்போது விரும்புவது" என்றனர். குருமகா சந்நிதானம் "அவ்வாறே யாகுக" என்று நீராடி, தமது ஆன்மார்த்த பூசா மூர்த்தியாகிய சொக்க லிங்கத்தைப் பூசித்துத் தியான சமாதியில் எழுந்தருளியிருந்து கருவில் இருந்த ஆன்மாவைக் கொணர்ந்து ஞான தீக்கை புரிந்து, மீட்டிங்கு வாரா நெறியாகிய சிவானந்தப் பெருவாழ்வில் அமர்த்தி வீடு பேற்றை வழங்கியருளினார்கள்.

ஒரு நாள் தஞ்சையை அரசு புரிந்த மன்னன் கடலாட விரும்பிச் சேனைகள் சூழக் காவிரிப் பூம்பட்டினத்தை நோக்கிச் செல்வா னாயினான். இடையில் தரும புரத்தை எய்தினான். அது சமயம் தருமபுரம் ஞான புரீச்சுரருக்கு அர்த்தயாமப் பூசை நடந்து கொண்டிருந்தது. மணியோசையைக் கேட்ட மன்னன் பல்லக்கை விட்டு இறங்கி, வணக்கஞ் செய்து, பின் பல்லக்கில் ஏறிப் புறப்பட்டான். அருகிலிருந்த பொறாமையுடைய புல்லர்கள், "இது ஒரு சைவ சமாதி. இதை மன்னர் வணங்குதல் கூடாது. வணங்கி விட்ட படியால் பிராயசித்தம் செய்து கொள்ள வேண்டும்" என்றார்கள். இதனைக் கேட்ட மன்னன், "ஓ, அப்படியா? இவ்விதமுள்ள இந்தச் சமாதியை இடித்தெறியுங்கள்" என்று கட்டளை இட்டுச் செல்வானாயினான்.

மன்னனது உத்தரவைத் தாங்கிய ஏவலர்கள் வந்து கடப்பாரைகளைக் கொண்டு ஆலயத்தை இடிக்கத் தொடங்கினார்கள். அது கண்ட அடியார் குழாங்கள் ஆச்சாரிய மூர்த்திகள்பால் விரைந்து சென்று, விஷயத்தை அறிவித்தார்கள். குருமூர்த்திகள், "நீங்கள் ஒன்றுஞ் செய்ய வேண்டா. அடங்கியிருங்கள்" என்று கூறி அடியில் வரும் திருப்பாடலைப் பாடினார்கள்.

**ஈசன் பலகீனன் என்றக்கால் ஆலயத்தில்**
**மோசம்வந்த தென்று மொழியலாம்-ஈசனே**
**ஆக்குவதும் ஆக்கி அழிப்பதும் தானானால்**
**நோக்குவதென் யாம்பிறரை நொந்து**

பாடியவுடனே நடேசப்பெருமான் தனது குஞ்சிதபாதத்தின்சிலம்பொலியைக்கேட்பித்துத திருவருள் புரிந்தனர். சஞ்சிதம் அகற்றும்

*Among all those who labour (for future happiness) he is greatest who lives well in the household state.* 47



குஞ்சித பாதத்தின் சிலம்போசையைக் கேட்ட குருநாதர் இறைவன் திருவருளை நினைந்து உள்ளம் உருகி,

**தேசஞ் சிவாலயங்கள் சேர வலையவொரு மோசம்வந்த தையோ முதல்வனே தேசத்து மன்னைவெறுப் பேனோ வருவினையை யூட்டுவிக்கும் உன்னைவெறுப் பேனோ உரை.**

என்று பாடி பஞ்சாக்கிரத்தைச் செபித்துக் கொண்டிருந்தார்கள்.

இரும்புக்கோல் படும் இடந்தோறும் உதிரம் பெருகியது. அதைக் கண்ட ஏவலாளர்கள் மூர்ச்சித்து வீழுந்தனர். நகர் எல்லையைக் கடந்து சென்று காவலன் கண்ணொளி நீங்கிக் குருடாயினான். இடிக்கு மாறு தூண்டியவர்களைப் பார்த்தான். அவர்கள் ஊமைகளாகித் திகைத்து நின்றார்கள். மன்னன் தனது குற்றத்தை உணர்ந்து மீண்டுந் தருமபுரத்தையடைந்து, திருமடத்திற் சென்று சிவஞானச் செம்மலின் திருவடிகளில் வீழ்ந்து, "செய்த பெரும் பிழையைப் பொறுத்தருளலல் வேண்டும்" என்று கூறிக் கண்ணீர் வடித்து வேண்டினான்.

கருணை வடிவான குருமூர்த்திகள் "சிவபெருமான் திருவருள் புரியும்" என்று கூறி, அரசனை அழைத்துக் கொண்டு ஆலயத்திற்கு எழுந்தருளினார்கள். மன்னன், "சுவாமீ! கடவுளைக் கண்டு மகிழக் கண்ணொளி யில்லையே? எவ்வாறு தரிசிப்பேன்?" என்று வருந்தினான். குருஞான சம்பந்தர் திரு வருளால் ஒரு கண் பெற்றான். ஏவலாளர்கள் மூர்ச்சித் திருப்பதையும் இரும்புக்கோல்பட்ட இடத்தில் உதிரம் வடிவதையும் பார்த்து வருந்திக் குருமூர்த்தி களை வணங்கி வேண்டினான். திருஞான தேசிகர் திரு நீற்றினைத் தெளித்தார்கள். உதிரம் வடிவது நின்றது. ஏவலாளர்கள் மூர்ச்சை தெளிந்து எழுந்து தொழுதார்கள்.

மன்னன் காவிரிப்பூம் பட்டினஞ் சென்று கடலில் நீராடித் திரும்பி வந்து, தருமபுரத்தின் தென் கீழ்த் திசையில் கூடாரமிட்டுத் தங்கி நாள்தோறும் முப்போதும் சுவாமி தரிசனஞ் செய்துவந்தான். அவன் தங்கிய இடம் இப்போது மன்னம்பந்தல் என்று வழங்கப் படுகின்றது.

வழிபாடு புரிந்து வருகின்ற மன்னன் ஒருநாள் குரு மூர்த்திகளை வணங்கி, "சிலர் சைவ சமாதியென்று கூறி என்அறிவை மயக்கி விட்டார்கள். அதன் உண்மையை உரைத்தருள வேண்டும்" என்று வேண்டினான். அப்போது, ஆச்சாரிய மூர்த்திகள் வருணாச்சிரம சந்திரிகை என்ற நூலினைச் செய்து அவனுடைய ஐயத்தை அகற்றினார்கள். நாற்பத்தெட்டு நாட்கள் தங்கி மன்னன் வழிபட்டான். சிவ ஞான மூர்த்திகளது திருவருளால் மற்றொரு கண்ணும் பெற்றான். புல்லறிவாளர்கள் குரு மூர்த்திகளை வணங்கி நிற்க, அவர்களது ஊமைத்தன்மையும் நீங்கியது. அளவில்லாத மகிழ்ச்சியுற்ற மன்னன், தான் முதலில் தரிசித்தது அர்த்தயாம பூசையே யாதலின், அது சிறப்பாக நடக்கும் பொருட்டு வேண்டிய நிலங்களை வழங்கிக் குருமூர்த்திகளிடம் விடை பெற்றுத் தஞ்சை சென்றான்.

சிவஞானிகளினது பெருமை இமயமலை போன்றது. அவர்களது திருவருளே இன்று உலகம் நின்று நிலவக் காரணமாகி நிற்கின்றது.

**பார்க்கப் பார்க்க, பழகப் பழக அலுப்பும் வெறுப்பும் தட்டாமலிருப்பது எதுவோ அதுதான் சாஸ்வதமான அன்பும் இன்பமும் தரும் முழுமுதற் தெய்வம்.**



*8. ஆற்றின் ஒழுக்கி அறன்இழுக்கா இல்லாவழ்க்கை*
*நோற்பாரின் நோன்மை உடைத்து. 48*

# தீர்த்தக்கரையில் மனம் கரைந்த பாடல் ஒன்று

- முருகவே பரமநாதன்

ச'லதசாப்தம் முன்னர்நாடும், நகரும், ஊரும், கிராமமும். வீடும் கலங்காத காலம், ஆடியமாவாசையன்று கீரிமலை நோக்கிப் போய்க் கொண்டிருந்தோம். மோட்டார் இரதத்திற் தந்தையார்க்குத் தர்ப்பணம் செய்யும் நோக்கோடு என்னை அழைத்துச் சென்றவர் என்னோடு மிகவும் ஈடுபாடுள்ளவர். இருவர் மட்டும் போனோம். எங்கே தீர்த்த மாடுவது என்ற வினா. கேணிப் பக்கம் நெருக்கடியாய் இருக்கும் என எண்ணி, நல்ல தண்ணி இறக்கம் சடையம்மா மடப் பக்கம் போனோம். கணிசமான சனம். நாமும் போய், தீர்த்தம் ஆடுவோம் என்று அங்கு போனோம். நெரிசல் இல்லாத சூழல். தெரிந்தவர்களும் தெரியாத முகங்களுமாய்ப் பலர். கலகலப் பாயும், மகிழ்வாயும், புனிதமாயும் உள்ள சூழ்நிலை. பூவரசமரங்களில் வேட்டி அலம்பித் தூக்கப்பட்டிருந்தது. சைக்கிள், கார், பஸ்ஸில் வந்தவர்களோடு கால்நடையாயும் பலர் வந்தனர். அந்தணர்கள் கரையோரமாய்த் தம் கடமையில் ஈடுபட்டிருந்தனர். பெண்களும் பிள்ளைகளும், ஆடவரும் கடலில் நீராடிக் கொண்டிருந்தனர். பலர் கடலில் குளித்த பின் நல்ல தண்ணீர்க் கிணற்றில் நீராடிக் கொண்டிருந்தனர். இன்னும் பலர் கோயிலினுட் பிரார்த்தித்து, அர்ச்சனை, ஆராதனை செய்த நிலையில். கோயிலினுள்ளே சடையம்மாவின் படம். இப்புண்ணியவதி இயற்றிய அறக் கொடைகள் பல. அவற்றுளிம்மடமும் கோயிலும் கிணறும் ஒன்று. கதிர்காமத்திற் பேர் பெற்ற சடையம்மா மடம் இன்றில்லை. நாம் போனதும் வேட்டியை அலம்பிக்காயப் போட்டோம். நம் நண்பர் தனிமையாய் அமைதியோடு ஓரிடத்தில மர்ந்து ஒருவருடன் உரையாடிக்கொண்டிருந்தார். முன் திண்ணையில் என்னோடு நன்கு பழகிய ஒருவர் (கதிரவேலு ஐயா) வேட்டியை உலரவிட்டு ஒரு சால்வையை இடுப்பிற் கட்டிக் கொண்டு இருந்தார். அவர் அருகே அடியேனும் உட்கார்ந்தேன். அவர் வாயில் இருந்து தாயுமான சுவாமிகளின் முதற் பாடல் மெல்லிசையில் ஒலித்துக் கொண்டிருந்தது

"அங்கு இங்கு எனாதபடி எங்கும் ப்ரகாசமாய்,
ஆனந்த பூர்த்தி ஆகி,
அருளொடு நிறைந்தது எது?தன் அருள் வெளிக்குளே
அகிலாண்ட கோடி எல்லாம்
தங்கும் படிக்கு இச்சை வைத்து, உயிர்க்கு உயிராய்த்
தழைத்தது எது? மனவாக்கினில்
தட்பாமல் நின்றது எது? சமயகோடிகள் எலாம்
தம் தெய்வம் எம் தெய்வம் என்று
எங்கும் தொடர்ந்து எதிர் வழக்கு இடவும் நின்றது எது?
எங்கணும் பெருவழக்காய்,
யாதினும் வல்ல ஒரு சித்து ஆகி, இன்பமாய்,
என்றைக்கும் உள்ளது எது? மேல்
கங்குல்பகல் அறநின்ற எல்லேஉளது எது? அது
கருத்திற்கு இசைந்தது அதுவே,
கண்டன எல்லாம்மோன உருவெளியது ஆகவும்
கருதிஅஞ் சலி செய்குவாம்!

அப்பெரியவர் கந்தர்மடம் வேதாந்த மடத்தின் அணுக்கத் தொண்டர். இப் பாடலை உள்வாங்கிய பிரக்ஞையோடு, இடையறாத் தைல தாரைபோற் பாடிக் கொண்டே இருந்தார். ஏற்கெனவே என்னை விழுங்கிய பாடல் எனினும், அன்று ஒரு புது உத்வேகத்தை அது தந்தது. சுமார் நாற் பத்தைந்து அறுவடிகள் (நிமிடங்கள்) செவி மடுத்துக் கொண்டே இருந்தேன். அவரும் பாடிக் கொண்டேயிருந்தார். அவரது அத்தி யந்த ஈடுபாடு என்னையும் கபளீகரம் செய்தது. இன்றுவரை நெஞ்சோடு கணந் தோறும் பேசிக் கொண்டே இருக்கவும் செய்கிறது. கற்சிலையிற் பொன்னெழுத்துப் போல. படிப்பதோடு கேட்பது நிறை பயனுடையது. கல்வி கேள்வி முக்கிய மானவை. வள்ளுவா

*The householder who, not swerving from virtue, helps the ascetic in his way endures more than those who endure penance* 48



கல்வி, கல்லாமை, கேள்வியென்று அதிகாரம் போட்டார். (கற்றில னாயினும் கேட்க: குறள்)) இப்பாடலுக்கு மேலைப்புலோலி, சதாவதானி கதிரைவேற் பிள்ளை அவர்கள் விரிவுரை எழுதியுள்ளார்; சித்பவானந்தா சிறப்புரை கண்டுள்ளார். இப்பாடலிலே எது என்னும் வினா ஆறு இடங்களில் அமைந்துளது. எது எது என்று பேசும் பாடல் அது கருத்திற் கிசைந்தது எனப் பதில் தந்து, கருதியஞ்சலி செய்குவாம் என்றும் பதில் கூறுகிறது. அடியேன் நீராடி, பிரார்த்தித்து, புறப்படும் வரை அவ்வன்பர் எழுந்திருக்கவில்லைப் . பாடிக் கொண்டே இருந்தார்கள். அவ்வளவு பிடிப்பு, தாயுமானர் வாக்கில். பல ஞானிகள், துறவோர், இல்லறத்தார் தாயுமானார் பாடல்களில் ஊறித் திழைத்தவர்கள். நம் நாட்டில் வதிந்த மறவன்புலவுச் சின்னத்தம்பிச் சுவாமிகளும் ஒருவர். மஸ்தான் சாகிபு பாடல் இதை அடியொற்றி வந்ததே. வேதாந்த சித்தாந்த சமரச ஞானியான தாயுமான அடிகளின் ஞானகுரு மௌனகுரு சுவாமிகள் பட்டினத்தார் போல் (உடற்கூற்று) வண்ணம் கண்ணிகள் யாத்துள்ளார். சைவசமயிகள் கற்று, கதியடைவார்களாக. குப்பைகளை விட்டு,

“என்றும் இருக்க உளம் கொண்டாய்
இன்பத் தமிழுக்கு இலக்கியமாய்,
இன்றும் இருத்தல் செய்கின்றாய்,
இறவாய், தமிழோ(டு) இருப்பார்பாய் நீ,
‘ஒன்று பொருள், அஃ(து) இன்பம்’ என
உணர்ந்தாய் தாயு மானவனே!
நின்ற பரத்து மாத்திரமோ?
நில்லா இகத்தும் நிற்பாய் ந”

—சி. சுப்பிரமணிய பாரதியார்.

## A note on Paramukti

S. Shivapadasundaram, B.A

Those who attain Paramukti fall into two classes:- (a) those whose Prarabtham is exhausted at the same time as ilberation from Anava; (b) those whose Prarabtham is not exhausted at the time of liberation. In the former case, as the Prarabtham has been exhausted, the body perishes immediately and the Soul gets freed from the three malams simultaneously. In the case of the second class of souls, Prarabtham remains and the body remains and the Anava and Karma both remain. As they get liberation from Anava, while the body yet lives, they are called Jeevamuktas. The Prarabtham that is left would have a tendency to produce its effect on the Soul, but as there is no Anava to start a desire for action, it cannot succeed in inducing the Soul to react. It therefore tries to utilize for action the habits the soul has formed immediately before it attained Paramukti. This is the habit of regarding oneself as different from God. This idea, he easily checks, by the contemplation of the Panchadchara and he is thus altogether free from Vasanamalam. He can therefore never be assailed by Parabtha. This habit is calledVasanamalam. It is compared to a potter's wheel which moves for sometime after the potter has stopped moving it. Just as this free motion of the wheel cannot do any work in the absence of the pot, so Prarabtham can have no effect on the Jeevamukta as he is free from Anava. But there are reckless dolts who regard giving vent to sexual desire as a case of Vasanamalam. The Soul gave up its illicit sex relation long before the Soul obtained ths Samayadeekshai and became a Saivite. This is million of births away from the true Vasanamalam. It is also note worthy that the Pramuktars have infinite love for other beings and take the utmost care when they gather flowers for Shiva Poojai. They Pick them; but never pluck them as that would hurt the trees.



9. அறன்எனப் பட்டதே இல்வாழ்க்கை அஃதும்
பிறன்பழிப்பது இல்லாயின் நன்று. 49

# சைவ நெறி பாடமும் பயிற்சி

## ஆலய அமைப்பு

சாந்தையூரான்

### கோயில்

ஆலயம் என்பது ஆன்மாக்கள் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடமாகும்.

இறைவனது இல்லம் ஆகும்.

திருமூல நாயனார் கூறுவது

உள்ளம் பெருங் கோயில் ஊனுடம்பு ஆலயம்

ஆலயங்கள்
மனிதன் ஒருவன் தரையிலே நேராக படுத்திருப்பது போன்ற அமைப்பில் காணப்படுகின்றது. இதன் பிரதான பகுதி **கர்ப்பக் கிரகம்** ஆகும்.

இது சிரசினை குறிக்கிறது

அதனை அடுத்து அமைவது அர்த்த மண்டபம் ஆகும்.கழுத்து

மகா மண்டபம் (மார்பு)

தரிசன மண்டபம் (வயிறு)

அலங்கார சபா மண்டபம் (கால்கள்)

அரச கோபுரம் (பாதங்கள்)

ஆலய வாசல்

கிழக்கையும் மேற்கையும் நோக்கி அமையும்.

ஆலயத்திற்கு செல்லும் போது தெரிவது கோபுரமாகும். இதனை தூலலிங்கம் எனவும் கூறப்படும்.

இறைவன் மீது பக்தி செலுத்துவதற்காகவே கோபுரம் மிக உயரமாக அமைந்துள்ளது.

கொடிமரம்

மனிதன் முதுகை நிமிர்த்தி எழுந்திருக்கிற போது முள்ளந்தண்டு எலும்பு எவ்வாறு உள்ளதோ அப்படியே ஆலயக் கொடிமரம் அமைந்திருக்கும்.

முள்ளந்தண்டு எலும்பின் அடிப்பாகம்

குண்டலினி சக்தி இருப்பிடமாகும். குண்டலினி சக்தி என்பது மறைந்திருக்கும் தெய்வ சக்தியாகும்.

கொடிமரத்தின் அடியிலிருக்கும் கணபதி மூலாதார அருவ நிலையைக் குறிக்கும்.

கொடிமரத்திலே கொடிச்சீலையும், தருப்பைக் கயிறும் சுற்றப்பட்டிருக்கும்.

| | | |
|---|---|---|
| கொடிமரம் சிவத்தைக் குறிக்கும் | நந்தி எழுதப் பட்ட சீலை ஆன்மாவைக் குறிக்கும் | தருப்பைக்கயிறு பாசத்தைக் குறிக்கும் |

கொடிமரத்தை ~ ஆதாரமாக சீலை இருப்பதைக் குறிப்பது சிவத்தை ஆதாரமாகக் கொண்டு ஆன்மா உள்ளது.

பாசம் சிவத்தை சாராது ஆன்மாவை சாரும். என்பதனை கொடிச்சீலையுடன் இணைக்கப்பட்டுள்ள தருப்பைக் கயிறு உணர்த்துகிறது.

கொடிக்கம்பத்திற்கு அடுத்து பலிபீடம்~பத்திரலிங்கம் ஆகும்.

பலிபீடம் — கீழான எண்ணங்களைப் பலியிட்டுத் தூயவராகி செல்ல வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

நந்தி

சிவன் கோயிலில் இடபமாகவும் பிள்ளையார் கோயிலில் பெருச்சாளி(எலி) ஆகவும் முருகன் கோயிலில் மயில் ஆகவும் விஷ்ணு கோயிலில் கருடனாகவும் இருக்கும்.

தீய எண்ணங்களை அகந்தை பலியிட்ட பின்னர் உலக பந்த பாசங்களினின்றும் விடுபட்டு இறைவனை சார வேண்டும் என்பதைக் காட்டுகிறது.

மூலவிக்கிரகம் அமையும் இடம் கருவறையாகும். (மூலஸ்தானம்) இதனது மேலே உள்ள பகுதி. விமானம் தூபி ஆகியன இருக்கும்.

ஆலயத்தின்

வலப்புறமாக
பிள்ளையாரும்

இடப்புறமாக
சுப்பிரமணிய சுவாமிகள்

வடகிழக்கில் தெற்குநோக்கி
வசந்த மண்டபம்
மேற்கு நோக்கி யாகசாலையும்
அமைந்திருக்கும்.

**பயிற்சிகள்:**

1. ஆலயம் என்பது யாது?
2. திருமூல நாயனார் எதனை ஆலயமாக எப்படி கூறுகிறார்?
3. ஆலயத்தின் பிரதான பகுதி எது?
4. உடம்பில் கர்ப்பக்கிரமாக உள்ளது எது?
5. ஆலய வாசல்கள் எப்புறம் அமைந்ததாக இருக்கும்?
6. ஆலய கோபுரம் பெரிதாக உயரமாக இருப்பது ஏன்?
7. குண்டலினி சக்தியின் இருப்பிடம் யாது?
8. மூலாதார கணபதி அமைந்திருக்கும் இடம் எவ்விடம்?
9. கொடிமரத்தை ஆதாரமாக உள்ள சீலை குறிப்பது எதனை?
10. கொடிச்சீலையுடன் இணைக்கப்பட்ட தருப்பை கயிறு குறிப்பது எதனை?
11. பலிபீடத்தை தாண்டும் போது யாது நிகழும்?
12. ஆலயத்தில் மூலவிக்கிரகம் அமைந்திருக்கும் இடம் யாது?

**விடைகள்:**

1. ஆலயம் என்பது ஆன்மாக்கள் மனதை ஒருநிலைப்படுத்தி இறைவனை வழிபாடு செய்வதற்குரிய இடமாகும்.
2. உள்ளம் பெருங்கோயில் ஊனுடம்பு ஆலயம்.
3. கர்ப்பக்கிரகம்.
4. சிரசு.
5. கிழக்கையும் மேற்கையும் நோக்கி வாசல் அமைய வேண்டும்.
6. இறைவன் மீது பக்தி செலுத்துவதற்காகவே கோபுரம மிக உயரமாக அமைந்துள்ளது.
7. முள்ளந்தண்டு எலும்பின் அடிப்பாகம்.
8. கொடிமரத்தின் அடியில்.
9. நந்தி எழுதப்பட்ட சீலை ஆன்மாவைக் குறிக்கும்.
10. தருப்பைக் கயிறு பாசததைக் குறிக்கும்.
11. கீழான எண்ணங்களை பலியிட்டுத் தூயவராக செல்ல வேண்டும்.
12. கருவறையாகும் (மூலஸ்தானம்)



*The marriage-state is truly called virtue. The other state is also good, if others do not reproach it.* 49

## வள்ளுவத்தில் சைவ சித்தாந்தம் ~ 3

# அறிவாகிய மெய்ப்பொருள்

சித்தாந்தரத்தினம்
க. கனேசலிங்கம்.

உலக வாழ்வை உயர்நிலைப்படுத்துவது அறிவு. அறிவுக்கு வழியமைப்பது கல்வி. கல்வியையும் அறிவையும் போற்றும் பல பாக்களைத் திருக்குறளிலே காணலாம். வையத்தில் வாழ் வாங்கு வாழ்வதற்கும், மெய்யுணர்வு பெறு வதற்கும் அறிவு இன்றியமையாதது. இதனை வள்ளுவம் வலியுறுத்துகிறது.

மனத்தைத் தன்போக்கில் போகவிடாமல் தீமையை நீக்கி நன்மையின் வழிச் செலுத்துவது அறிவு என்பதும் வள்ளுவர் வாய்மொழி

"சென்ற விடத்தில் செலவிடா தீதொரீஇ
நன்றின்பால்உய்யப்ப தறிவு" ~ (குறள் 422)

இத்தகைய அறிவுக்கு அடிப்படையாக அமைந்த கல்வியைப் பெற்றவன் அறிவைப் போற்றாதிருப்பானாயின் அவன் நல்நிலை அடையமாட்டான். அறிவே உருவாக இருக்கும் இறைவனைப் போற்றாதுவிடின் கற்ற கல்வியால் எப் பயனும் இல்லை. இதனை வலியுறுத்துவதாகப் பின்வரும் குறள் உள்ளது.

"கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவன்
நற்றாள் தொழாஅர் எனின்" ~ (குறள் 2)

### வள்ளுவரின் கடவுட் கொள்கை

பல தெய்வ வழிபாடு தமிழகத்தில் முன்னர் இருந்தது என்பதைப் பழந்தமிழ் நூல்களிலிருந்து அறியலாம். நிலத்தை ஐந்தாக வகுத்து ஒவ்வொரு நிலத்திற்கும் ஒவ்வொரு தெய்வத்தைக் கற்பித்து வழிபட்டதை தொல்காப்பியத் திலிருந்து அறிய முடிகிறது.

'மாரோயன் மேய காடுறை உலகமும்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்தலென
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே!
(தொல். பொருள் ~ 6)

சங்க இலக்கியங்களில் பற்பல கடவுளர் வருகின்றனர். பரிபாடலும் திருமுருகாற்றுப்படையும் திருமால், முருகன் போன்ற தெய்வங்களுக்கு முக்கியத்துவம் கொடுக் கின்றன. இவை போன்ற பல கடவுளரைத் திருக்குறளில் காணமுடியா திருப்பது சிந்தனைக்குரியது. 'அடியளந்தான்', 'தாமரைக்கண்ணான்' போன்ற தெய்வங்களைக் குறிக்கும் தொடர்கள் திருக்குறளில் சில இடங்களில் வருவது உண்மையே. ஆயினும் அவை இலக்கிய மரபை யொட்டி உதாரணத்துக்காக எடுத்தாளப்பட்ட தொடர்களாகவே உள்ளன. அவை தெய்வங்களைக் குறித்த வள்ளுவரின் கருத்துக்களாக இல்லை.

கடவுள் பற்றிய திருவள்ளுவரின் கருத்தை திருக்குறளில் முதல் அத்தியாயமான கடவுள் வாழ்த்தில் காணமுடிகிறது. வள்ளுவர் காலத்துக்கு முன்தோன்றிய நூல்கள் பல கடவுளரைக் கூற, திருக்குறள் கடவுள் ஒன்று என்ற கருத்தைக் கொண்டுள்ளது. அக்கடவுளின் வெவ்வேறு தன்மைகள் உணர்த்தப்படுகின்றன. ஆதிபகவன், வாலறிவன், எண்குணத்தான் என்பன போன்ற சொற்களால் இறைவனை வள்ளுவர் குறிப்பிடுகிறார். இறுதிப்பாட்டில் இறைவன் என்றே குறிக்கப்படுகிறது. கடவுள் வாழ்த்திலுள்ள பத்துப் பாக்களிலும் இறைவனைப் புராண இதிகாசங்களுடனோ, வேறு இலக்கியங்களுடனோ தொடர்பு படுத்தி வள்ளுவர் கூறவில்லை.

### வேத உபநிடதக் கருத்து

வேத உபநிடதங்களில் பற்பல தெய்வங்களைக் காணமுடிகிறது. வேதங்களின் இறுதியாக வந்தவை உப நிடதங்கள். இறுதியாக (அந்தமாக) வந்தவை என்பதால் வேதாந்தம் எனப் பெயர் பெறுபவை இவை. உபநிடதங் களில் பல தெய்வங்கள் காணப்படினும். அவற்றுக்கும் மேலான ஒரு பரம்பொருளையும் அங்கே காணலாம். பின் எழுந்த பல சமய, தத்துவக் கருத்துக்களுக்கு அடிப்படையாக அமைந்தது இப்பரம்பொருள் பற்றிய உபநிடதக் கருத்து.

இதனால், வள்ளுவரின் கடவுள் பற்றிய கொள்கை இவ்வுப நிடதக் கருத்தைப் பின்பற்றி எழுந்தது என கருத இடமுண்டு உபநிடதத்தின் கருத்து இறைவன் ஒருவனே அநாதி நித்தியப் பொருள் எனக் கொண்டு, உயிர் உட்பட்ட உலகப் பொருட்கள் அனைத்தும் அதிலிருந்து வந்தவை எனக் கருதப் படுகிறது.

10. வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும். 50



திருக்குறளிலே வரும் உயிர் உலகு பற்றிய கருத்துக்கள் இதற்கு மாறாகக் காணப்படுகின்றன. இதனால் வள்ளவரின் கடவுட் கொள்கை உபநிடதக் கொள்கை யென்றோ. வேதாந்தம் சார்ந்ததென்றோ கருதுவதற்கு இடமில்லை.

## தமிழகத்துச் சிந்தனை

எதனையும் இருமையில் காண்பது மனித இயல்பு, மெய் என்றால் பொய், நீதி என்றால் அநீதி என்று இருமைப் பண்புகளாக மிளிர்வதையே எதிலும் காணமுடிகிறது. ஆயினும். இந்த இருமையிலும் இணையாத, இருமையையும் கடந்த ஒரு மேலான பண்பையும் அன்றைய தமிழ் ஞானிகள் உணர்ந்திருந்தனர்.

> "ஒன்றே வேறே என்றிரு பால்வயின்
> ஒன்றி உயர்ந்த பால் அது ஆணையின்....//

என்ற தொல்காப்பியத் தொடர் இதனை உணர்த்துவதாக உள்ளது.

பல தெய்வ வழிபாடு பழந்தமிழகத்தில் இருந்த தெனினும், எல்லாத் தெய்வங்களுக்கும் மேலான ஒரு பரம்பொருளையும் அவர்கள் உணர்ந்து போற்றினர் என்பதற்குத் தொல்காப்பியம் போன்ற நூல்களிற் சான்றுகள் உண்டு. அப்பரம் பொருள் அறிவுடைப் பொருள் என்பதை "வினையின் நீங்கி விளங்கிய அறிவின் முனைவன்" என்ற தொல்காப்பியத் தொடர் விளக்குகிறது. இது போன்ற சிந்தனைகளை உள்ளடக்கியதாகத் தமிழகத்துச் சிந்தாந்தக் கொள்கை பின்னாளில் வளர்ந்ததைக் காணலாம். திருவள்ளுவரின் தமிழ் மறையும். இதனைப் பிரதிபலிக்கின்றது.

## அறிவாகிய ஒன்று

நுண்ணறிவும் ஆழந்த அறிவியற் கொள்கையும் கொண்டவர் திருவள்ளுவர். அவரின் சிந்தனை, மெய்யுணர்வின் அடிப்படையில் அமைந்தது என்பதைத் திருக்குறள் வாயிலாக உணரலாம். இத்தகைய சான்றோரின் கருத்துக்கள் அவரின் ஆழ்மனத்திலிருந்து எழுந்த உயர் கருத்துக்களாக அமைவது இயல்பே.

கிரேக்க அறிஞரான பிளேற்றோ, அவர்காலத்திருந்த கடவுள் நம்பிக்கைகளுக்கு மாறான ஒரு கொள்கையை உருவாக்கினார். கிரேக்கர்களிடம் பல தெய்வங்கள் குறித்த பற்பல கதைகள் நிலவிய காலத்தில், கடவுள் தீய பண்புகளற்ற, நலம் அளிக்கும் ஒருவரே என்று நிறுவியவ அவர் அவரது "குடியரசு" (Republic) என்ற நூலில் இதனைக் காணலாம். இத்தகைய ஒரு நிலை திருவள்ளுவரின் சிந்தனைவழியாகவும் வந்திருக்கலாம். ஆயினும்அவரின் சிந்தனைக்கு தமிழகத்தில் மன்னெழுந்த மெய்யறிவாளர் சிந்தனையும் காரணமாக அமைந்திருத்தல் வேண்டும்.

அறிவின் வடிவினனாக இறைவனைக் கொள் வதைத் திருமுறைகளிலும் சித்தாந்த நூல்களிலும் காணலாம். மாணிக்கவாசக சுவாமிகள், "அஞ்ஞானந்தன்னை அகல் விக்கும் நல்லறிவே, "அறிவாம் தேற்றனே", "அறிவே போற்றி" என்று இறைவனை அறிவாகக் கண்டு போற்றுகிறார். சைவசித்தாந்த நூலான திருவருட்பயனின் முதற்பாட்டு "அறிவாகி எங்கும் நிகரில் இறை நிற்கும் நிறைந்து" என்று இறைவனை அறிவாகக்கண்டு அவனின் வியாபகத் தன்மையை விளக்குகிறது. இவற்றுக்கெல்லாம் முன்வந்த திருக்குறள் இறைவனை "வாலறிவன்" என்று கூறி விளக்குவது முன்னுதாரணமாக உள்ளது.

வாலறிவன் என்பதற்கு மெய்யுணர்வினை உடையவன் என்று பரிமேலழகர் பொருள்கண்டுள்ளார். மாசற்ற அறிவுருவாகிய இறைவன் என்று காலிங்கர் விளக்குகிறார் வான்மை என்பது .வெண்மை, பெருமை ஆகியவற்றைக் குறிப்பது. எப்படிப் பொருள்காணிலும் வாலறிவன் என்பது எல்லா அறிவுக்கும் மேலான அல்லது மாசகன்ற அறிவுடையவன் என்பதையே குறிக்கிறது. இத்தகைய ஒருவன் அறிவு வடிவினர்கவே இருக்கவேண்டும். வள்ளுவர் கூறும் வாலறிவன இத்தகைய இறைவனே. சைவசித்தாந்தம் கூறும் அறிவுப் பொருளான பரம் பொருளுக்கும் வள்ளுவர் கூறும் இறைவனுக்கும் வேறுபாடு காணமுடியாது.

பலவித அனுபவங்களால் அறிவு வளர்கிறது. அறிவு பெறும்போது அறியாமையும் தெளிகிறது. "அறி தோறறியாமை கண்டற்றால்" (குறள்1110) என்று வள்ளுவர் இதனை விளக்குகிறார். மேலும் அறிவு பெறும் போது முன்கண்ட அறியாமை நீங்க முன் காணாத அறியாமை தெரிகிறது இங்ஙனம் அறிவு 'பெருகப் பெருக, அறியாமை படிப்படியாக நீங்குகிறது. இறுதியில் அறியாமை இல்லாத. மாசகன்ற, அறிவு மட்டும் நிறைந்து நிற்கும் நிலை ஒன்று வருகின்றது. அறிவுப் பெருக்கத்தின் இறுதி நிலையான. நிலையறிவாக உள்ள நிலை இது. இந்நிலையில் இறை வனைக் காட்டுவது சைவ சித்தாந்தம். அறிவு வடிவான இத்தகைய இறைவனை வணங்காதுவிடின், அறிவைப்பெறும் கல்வியைக் கற்றதனால் எந்தப் பயனும் இல்லை என்பது திருவள்ளுவர் கருத்து. இது சைவ சித்தாந்தம் கூறும் இறை இயல்பையும் விளக்குவதாக உள்ளது. இறைவன் ஒருவனே, அவன் அறிவு வடிவானவன் என்பதும் பெறப்படுகின்றது.



*He who on earth has lived in the conjugal state as he should live will be placed among the Gods who dwell in heaven.* 50

# ஆடி அமாவாசை

அமாவாசை என்றால் நம் சமயத்தவர்களுக்கு மிகவும் பயபக்தி உண்டாகின்றது. ஆடி அமாவாசை சைவர்களுக்கும் வைணவர்களுக்கும் ஒரு முக்கியமான தினம். பிதுர் வழிபாட்டைக் குறிக்கும் ஒரு புண்ணியமான சிராத்த தினமாகும்.

திதி என்பது சூரியனுக்கும் சந்திரனுக்கும் உள்ள தூரத்தை பாகத்தைக் குறிப்பிடும் ஒரு சொல். அமா என்றால், ஓரிடத்தில் பொருந்தியது (குவிந்தது~அடுத்தது) என்று பொருள். ஓர் இராசியில் சூரியன் சந்திரன் இருவரும் சேர்ந்து உறவாகும் வாசியான நாள் அமாவாசி எனப்படும். வான மண்டலத்தில் தமது அளப்பு வேலையைச் சிருட்டியின் ஆரம்ப காலத்திலிருந்தே தொடங்கிய இருவரும் அமவாசை நாளிலன்றுதான் ஒருங்கு கூடுகின்றனர்.

சூரியனும் சந்திரனும் ஒரே பாகையில் பூமிக்கு நேராக வரும் பொழுது அமாவாசைத் திதி உண்டாகும். சந்திரன் சூரியனிலிருந்து பிரிந்து பூமியைச் சுற்றிவருகின்ற மார்க்கத்தில் பூமிக்கும் சூரியனுக்கும் 180 வது பாகையில் வரும்பொழுது பௌர்ணிமித் திதி நிகழும்.

திதிகள் பூர்வபக்கத்திதிகள், அபரபக்கத்திதிகள் என இரு வகைப்படும். அமாவாசைக் கடுத்த பிரதமை முதல் பௌர்ணிமி இறுதியாகவுள்ள 15 திதிகளும் பூர்வபக்கமெனப்படும். பௌர்ணிமைக்கடுத்த பிரதமை முதல் அமாவாசையிறுதியாகவுள்ள 15 திதிகளும் அபரபக்கமெனப்படும். பூர்வபக்கம். அபரபக்கம் என்பன முறையே சுக்லபக்ஷம், கிருஷ்ணபக்ஷம்; வளர்பிறை, தேய் பிறை எனவும்கூறப்படும்.

அமாவாசையின் கருத்தை ஞானமுறையிற் கவனித்தலும் நல்லது. சூரியன் ஞானகாரகன், ஆத்ம காரகன் ஆவான். பிராணிகளின் ஆத்ம அமைப்பு சூரியனாற்தான் நிகழ்கின்றது. ஆண்மை, ஆற்றல், பராக்கிரமம், வீரம், தீரம், தவம் யாவும் சூரியனாலேயே தோன்றகின்றன.

சந்திரன் மனத்திற்கு அதிபதி. மகிழ்ச்சி, தெளிந்த அறிவு உற்சாகம், இன்பம் முதலியன சந்திரனால் அடையத்தக்கன. இத்தகைய சூரிய சந்திரர் இருவரும் ஒரு ராசியில் சஞ்சரிக்கும் நாள் புனிதமான நாள். உயிர்களின் சுகபோகமாகிய மாறுதலையுணர்த்தும் நாள். சகல தேவர்களும் அமாவாசையின் அதிபர்களாவர். அன்று நோன்பு நோற்றல், விரதங்காத்தல், சிறந்ததும் இறைவனுக்கு மகிழ்ச்சி யளிப்பதும், பெருமை தருவதுமான நன்னாளாகும். இன்னும் நமக்கு இரண்டு சரீரங்கள் ~ சீவதேகங்கள் உள்ளன. அவை, தூலசரீரம், சூக்கும சரீரம், குணசரீரம் எனப்படும். நமது உடம்பு தூலசரீரம். இது தூலகாயம், தூலதேகம், புறவுடல் எனவும் படும். ஆயுள் முடிவில் முன்னுடல் விட்டு விட்டு மற்றோர் உடம்பெடுத்தற்கு ஏது வாயிருப்பது அருவுடம்பு. இது சூக்கும காயம், சூக்கும தேகம், உள்ளுடம்பு எனவும்படும்.

இவற்றுள் தூலசரீரமானது. பஞ்ச பூதங்களாலும் பரிணமிக்கப்பட்ட உருஉடம்பு, சூக்கும சரீரமாவது காரண தன் மாத்திரைகளைந்தும், அந்தக்கரணங்கள் மனம், புத்தி, அகங்காரமெனும் மூன்றும் கூடியது அருவடம்பு.

ஒருவர் இறக்கும்போது தூலசரீரம் அழிந்துபோகும். சூக்கும சரீரம் அழிவதில்லை. அவை சர்வசங்கார காலத்திலே அல்லது முத்திநிலையிலாவது அழியும். ஓர் உயிர் தூலசரீரத்தை விட்டு நீங்கும்போது சூக்கும சரீரத்தோடு செல்லும். அங்ஙனம் சென்ற உயிர், பூமியிற் தான் புரிந்த வினைகளுக்கேற்ப இன்பதுன்பங்களைச் சுவர்க்க, நரகத்தில் அநுபவிக்கும். சுவர்க்கத்திலே இன்பங்களை அநுபவிக்கும்போது அச்சூக்கும சரீரம் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றது. அது பஞ்சபூதங்களின் சாரங்களினால் ஆக்கப்பட்டது. ஆதலின் அது பூதசார சரீரம் எனப் படும். தேவசரீரம் எனப்படுவது அதுவேயாகும். நரகத்திலே துன்பங்களை அநுபவிக்கிற சூக்கும சரீரமும் அதற்கென்றே ஒரு சரீரத்தைப் பெற்றுக் கொள்ளுகின்றது. அது நோய் கொண்டதாயும், எவ்வகைத் துன்பங்களையும் தாங்க வல்லதாயும் இருக்கும். அது யாதனாசரீரம் எனப்படும். இவ்விதம் அநுபவித்துத் தொலையாமல் எஞ்சி நின்ற (பிராரத்துவ) வினைகளினாலே மீண்டும் பூமியில் வந்து பிறக்கும்.

இறந்தவர்களுடைய தூலவுடம்பும், சூக்குமவுடம்பும் பிறவிக்குக் காரணமான வினையுமெனப்பட்ட வெல்லாம் தகனக்கிரியை, அந்தியேட்டி இவற்றால் நீங்கிவிடும். அபுத்திபூர்வமாகச் செய்தன அந்தியேட்டி. தகனக் கிரியைகளால் மாறும். புத்திபூர்வமாகச் செய்தன அநுபவித்தேயாக வேண்டும். உயிர் சபிண்டீகரணம் (பிதிர் பூசை) என்னுங் கிரியையினாலே சிவலோகத்தையடையும். அங்கு பிதாவினுடைய உயிர் ஸ்கந்த சொரூபமாக இருக்கும். பாட்டனுடைய உயிர், சண்டபதத்திலே சண்ட சொரூபமாக இருக்கும். முப்பாட்டனுடைய உயிர் கணாதீச பதத்திலே கணாத சொரூபமாக இருக்கும். இவர்களுக்குத் தலைவர்களாக ஸ்கந்த, சண்ட, கணாதீசர் என்னும் மூவர் அதிதெய்வங்களாக விளங்குவர். இவர்கள்தான் பிதிர் தேவதைகள் என் அழைக்கப்படுவர். இவர்களைப் பிரீதிசெய்து வழிபடுவதுதான் சிராத்தம் எனப்படும். நிருவாண தீட்சை பெற்றவர்களுடைய பிதுர்தேவர்கள் ஈசர், சதா சிவர்; சாந்தர் எனப்படுவர்.

மண்டலங்கள் சூரியமண்டலம், சந்திரமண்டலம், மேக மண்டலம், பூமண்டலம் எனப் பலவகைப்படும். இறந்துபோன உயிர்கள் தாம் செய்த புண்ணிய பாவத்திற்கேற்பச் சுவர்க்க நாரங்களையடைவனவும் முத்தியடைவனவுமன்றிச் சில உயிர்கள் உடனே ஒரு தூல தேகத்தை எடுப்பனவுமாகவும் இருக்கும். அன்றி, அவை இறக்கின்ற காலநேரங்களைப் பொறுத்ததாக; உயிர்களை நற்பதவியடையச் செய்தலுக்குச் சிராத்தம் இன்றியமையாததாகும்.

சூரியனும் சந்திரனும் ஒன்றபட்டுப் பூமிக்கு நேரே நேர்படுஞ் சமயமே இதற்கு மிகவுஞ் சிறந்தது. ஒவ்வோர் அமாவாசையும் பிதிர்கருமத்திற்கு விசேஷமானது. எனினும், ஆடி அமாவாசை மிகவும் புனிதமும் விசேஷமு மானதாகும். தை அமாவாசையும் சிறந்தது. ஏனெனில், சூரிய மண்டலத்துக்கு அப்பாலுள்ள பிதிர்களுக்குரிய இடமாகும். இது பிதுர் லோகம் எனப்படும். வடக்கு நோக்கிச் சஞ்சரிக்கும் சூரியன், தெற்கு நோக்கிச் சஞ்சரிக் கும் ஆரம்பகாலம் ஆடிமாசமாகும். ஆகவே, ஆடி அமா வாசை பிதிர் தருப்பணத்திற்கு மிகவும் சிறந்த கால மாகும்.

அமாவாசை, பௌர்ணமி, நாட்களில் கடல் தீர்த்த மாடுதல் மிகவும் நல்லது, கடல் நீரை, நமது பாபத்தைக் கழுவும் பரிசுத்த நீராகவும், இறைவனது அருள் நீராகவும் நினைந்து, காலஞ்சென்ற பிதிரர்களை எண்ணி, அவர்களது பாவத்தைப் போக்கி அவர்களுக்கு முத்தியளிக்கும் வண்ணம் இறைவனை வேண்டி நீராடல் வேண்டும்.

உடல் நலத்தின் பொருட்டும் கடல் நீராடுதல் நன்மையாகும். அமாவாசை பௌர்ணிமை நாட்களில் கடலின் நிலையும் நமது உடலின் நிலையும் மாற்றமடைகின்றது. கடல் நீராடுவதனால் அநேக உள் ரோகங்களும், புறரோகங்களும் சொஸ்தமடைகின்றன. நீராடினால் சரீரம் சுத்தமாகின்றது. ஆரோக்கியம், உற்சாகம் என்பன உண்டாகின்றன. மன ஒருமைப் பாடும், மனப்பரிசுத்தமும் உண்டாகின்றது. அதிக பசியுண்டாகின்றது. ஆதலின், இடையிடையே கடல் நீராடுதலும் அவசியமாகும்.

அமாவாசை நாளில் (மாதரின் பந்துயத்தல்) மாபாவமெனக் கூறப்படுகின்றது. ஆத்மகாரகனான சூரியனுடன் மனத்தின் காரகனாகிய சந்திரன் ஒருங்கே கூடியிருக்கும்பொழுது மானிடரின் ஆத்ம சக்தி குன்றி யிருக்கும். மாதரின் மனமும் மிகவும் சோர்ந்திருக்கும். இதனை மீறி இன்பந்துய்த்தால், அங்கவீனமுள்ள ஆண் பெண்ணற்ற அலிகள் போன்ற குழந்தைகள் பிறப்பர். எனச் சொல்லப்படுகிறன்றது.

"காலற்றன உடலற்றன தலையற்றன நாளில்
கோலக் குய மடவார்தமைக் கூடின்மல டாவர்
மாலிக்கொரு கோயில் செயின் அதுவும் வெகு பாடாம்
ஞாலத்தவர் வழிபோமின் நலமுய் திடாரவமே பயன"


ஆதலின், இப்புண்ணிய தினத்திலே மூர்த்தி தலம் தீர்த்தம் அமைந்த புண்ணிய தலங்களிலாயினும் வீடுகளிலாயினும் பிதிர் கருமங்களை முறைப்படி செய்தல் இன்றியமையாதொன்றாகும்.

**பூவும் கல்லும்**

**பெரியோர்களின் மனமானது பலவகையான செல்வங்களை பெற்ற சமயத்தில், நீலோத் பலப் பூவைப் போல மிருதுவாக இருக்கும் ஆபத்தான சமயங்களிலே பெரியமலையின் கற்களின் கூட்டம் போல கடினமாக இருக்கும்.**

# தேவர் கலி வலி வென்றமை

பெருந்தவமுடையீர்! செவிகளுக்கு அமிருதம் பொழி கதையொத்த இனிய கதை ஒன்றைச் சொல்லுகிறேன். முன் ஒருகாலத்தில் பிரமன் முதலான தேவர்யாவரும் கைலை மலை அடைந்து, சிவபெருமானை வணங்கி ஒரு விண்ணப்பஞ் செய்வாராயினர்.



"தேவாதி தேவரே! லோகநாயகரே! படைத்தல் முதலிய முத்தொழில்களையும் புரியும் பதிப் பொருளே! கிருதயுகம், திரேதா யுகம் துவாபர யுகமென்னும் மூன்று யுகங்களிலும் மூவுலகங்களிலும் வாசஞ் செய்திருக் கின்றோம். இப்பொழுது முன்னே மனைவியும், பின்னே சுமை சுமந்துகொண்டு பெற்ற தாயும்வர இவ்வுலகத் திலே கலிராசன் வந்துவிட்டான் பிருதிவிவீரியம் அற்று, ஓஷதி பலமில்லாததாய் இருக்கின்றது. நீசர் பெருமை பெற்று விளங்குகின்றனர். அரசர் குடிகளது பொருளைப் பறித்தலிலேயே எப்பொழுதுங் கருத்தாய் இருக்கின்றனர். பிராமணர் தமக்குரிய கருமத்தை இழந்து விபரீத கருமங்களைச் செய்பவராயிருக்கின்றார்கள். மனையாள் தன் கணவன் மேல் மிக வைரங்கொண்ட சித்தமுள்ள வளாயிருக்கிறாள் மைந்தர் பிதாவை நிந்திப்பவராயினர், இப்படிப் பலவித மாகிய மாறுபாடுகொண்டு விளங்கும் இக் கலியுகத்திலே தருமம் காடு போய் ஒளிந்துவிட்டது. ஆதலால், இனி நாங்கள் எங்கே செல்லக் கடவோம் இக்கலியிலே நாங்கள் கலி வலியில் அகப்படாது தப்பிவாழத் தக்க நல்ல ஒரு புண்ணியத்தை வகுத்தருள வேண்டு மென் இரந்து கேட்டானர்.

அவரது வேண்டுகோளைக் கேட்ட சிவபெருமான், "தேவர்களை! நம் பிரிய குமாரனாகிய சுப்பிரமணிய மூர்த்திக் உரிய தலங்கள் பலவிருக்கின்றன. அவற்றுள் மிக உத்தமமானதும், அவன் எப்பொழுதும் விட்டு நீங்காமல் வசிக்கப்பெற்றதும், அவனுக்கு மிக உவப் புடையதுமான கதிர்காம கிரியென ஒன்றிருக்கின்றது, அக்கிரியின் பக்கத்திலே மிக்க இன்பத்தை விளை விப்பதும், கதிர்காமம் என யாவராலும் புகழப் படுவதும், எமக்கும் மிகப் பிரியமானதுமான தலம் ஒன்றிருக்கின்றது் கலி மன்னனும் நோய்களும் யமனும் அத்தலத்தை யடைவதில்லை. அங்கு வசிப் போரைப் பாவங்கள் சென்றடையர் வசிக்கப் பெறுவோர் பெரும் புண்ணிய முடையோர். ஆதலால் நீங்கள் யாவரும் அங்கே சென்று முனிவர்களோடும் சுகமாய் வாசஞ் செய்யக் கடவீர் என்று அருளிச் செய்தார்.

பிரமன் முதலான தேவர்கள் சிவபெருமானுடைய திருவாக்கைக் கேட்டு மகிழ்ந்து கதிர்காமத்தை யடைந்து அங்கே சுகமாய் வசித்துக்கொண்டு கலிவலியில் அகப்படாதிருக்கின்றனர்.

# சைவ வினாவிடை

## சிவலிங்கவியல்

☆ **சிவபெருமானை ஆன்மாக்கள் வழிபடும் இடங்கள் எவை?**

சிவபெருமான், புறத்தே சிவலிங்கம் முதலிய திருமேனிகளும் குருவுஞ் சங்கமமும் ஆதாரமாகக் கொண்டு நின்றும், அகத்தே உயிர் இடமாகக் கொண்டு நின்றும், ஆன்மாக்கள் செய்யும் வழிபாட்டைக் கொண்டருளுவர். ஆதலால், ஆன்மாக்கள் அவரை வழிபடும் இடங்கள் இவைகளேயாம். சிவத்துக்குப் பெயராகிய இலிங்கம் என்னும் பதம், உபசாரத்தால். அச்சிவம் விளங்கப் பெறும் ஆதாரமாகிய சைவ முதலிய வற்றிற்கும் வழங்கும். (சைலம் = சிலையா லாகியது)

☆ **சிவபெருமான் இவ்விடங்களில் நிற்பர் என்றது, அவர் எங்கும் வியாபகர் என்றதனோடு மாறுபடு மன்றோ?**

மாறுபடாது; சிவபெருமான், எங்கும் வியாபகமாய் நிற்பினும், இவ்விடங்களில் மாத்திரமே தயிரில் நெய் போல விளங்கி நிற்பர்; மற்றை இடங்களி லெல்லாம் பாலில் நெய் போல வெளிப்படாது நிற்பர்.

☆ **சிவலிங்கம் எத்தனை வகைப்படும்?**

பரார்த்த லிங்கம், இட்ட லிங்கம் என இருவகைப்படும்.

☆ **பரார்த்த லிங்கமாவது யாது?**

சிவபெருமான் சங்கார காலம்வரையுஞ் சாந்நித்தியராய் இருந்து ஆன்மாக்களுக்கு அநுக்கிரகிக்கப் பெறும் இலிங்கமாம். இது, தாவரலிங்கம் எனவும் பெயர் பெறும். சாந்நித்யம் = அண்மை, அடுத்தல், வெளிப்படுதல். தாவரம் எனினும், திரம் எனினும், நிலையியற் பொருள் எனினும் பொருந்தும்.

☆ **பரார்த்த லிங்கம் எத்தனை வகைப்படும்?**

சுயம்பு லிங்கம், காண லிங்கம், தைவிக லிங்கம் ஆரிட லிங்கம், மாநுட லிங்கம் என ஐவகைப்படும். இவைகளுள்ளே, சுயம்பு லிங்கமாவது தானே தோன்றியது. காண லிங்கமாவது விநாயகர் சுப்பிரமணியர் முதலிய கணர்களாலே தாபிக்கப்பட்டது. தைவிக லிங்கமாவது விட்டுணு முதலிய தேவர்களாலே தாபிக்கப்பட்டது. ஆரிட லிங்கமாவது இருடிகளாற் தாபிக்கப்பட்டது, அசுரர் இராக்கதர் முதலாயினாராற் தாபிக்கப்பட்டதும் அது. மாநுட லிங்கமாவது மனிதராற்றாபிக்கப்பட்டது.

☆ **இவ்வைவகை யிலிங்கங்களும் ஏற்றக் குறைவு உடையனவா?**

ஆம்: மாநுட லிங்கத்தின் உயர்ந்தது ஆரிட லிங்கம்; அதனின் உயர்ந்தது தைவிக லிங்கம்; அதனின் உயர்ந்தது காண லிங்கம்; அதனின் உயர்ந்தது சுயம்பு லிங்கம்.

☆ **பரார்த்த லிங்கப் பிரதிட்டை, பரார்த்த பூசை, உற்சவம் முதலியவை செய்தற்கு அதிகாரிகள் யாவர்?**

ஆதிசைவர்களுள்ளே, சமயதீக்ஷை விசேஷதீக்ஷை நிருவாணதீக்ஷை ஆசாரியாபிஷேகம் என்னும் நான்கும் பெற்றவர்களாய்ச் சைவாகமங்களிலே மகாபாண்டித்திய முடையவர்களாய் உள்ளவர்கள்.

☆ **திருக்கோயிலுள் ளிருக்குஞ் சிவலிங்கம் முதலிய திரு மேனிகள் எல்லாராலுமே வழிபடற் பாலனவா?**

ஆம்: சரியை, கிரியை, யோகம், ஞானம் என்னும் நான்கு மார்க்கத்தாராலும் வழிபடற் பாலனவேயாம்; ஆயினும், அவ்வழிபாடு அவரவர் கருத்து வகையால் வேறுபடும்; படவே, அவருக்குச் சிவபெருமான் அருள் செய்யும் முறைமையும் வேறுபடும்.

☆ **சிவலிங்கம் முதலிய திருமேனிகளைச் சரியையாளர்கள் எக்கருத்துப்பற்றி வழிபடுவார்கள்?**

**அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

சரியையாளர்கள் பகுத்தறித லில்லாத சிவலிங்கம் முதலிய திருமேனியே சிவமெனக் கண்டு வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான் அங்கே வெளிப்படாது நின்று அருள் செய்வர்.

☆ **கிரியையாளர்கள் எக்கருத்துப்பற்றி வழிபடு வார்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

கிரியையாளர்கள் அருவப்பொருளாகிய சிவபிரான் ஈசானம் முதலிய மந்திரங்களினாலே சிவலிங்க முதலிய திருவுருக் கொண்டார் என்று தெளிந்து, மந்திர நியாசத் தினால் வழிபடுவார்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கடைந்த பொழுது தோன்றும் அக்கினி போல, அவ்வம் மந்திரங்களினாலும் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று, அருள் செய்வர்.

☆ **யோகிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவர்கள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

யோகிகள், யோகிகளுடைய இருதய மெங்கும் இருக்குஞ் சிவபெருமான் இந்தத் திருமேனியிலும் இருந்து பூசை கொண்டருளுவர் என்று தெளிந்து, சாத்திய மந்திரங்களினால் வழிபடுவர்கள்; அவர்களுக்குச் சிவபெருமான், கறந்த பொழுது தோன்றும் பால்போல, அவ்வம் மந்திரங்களினால் அவ்வவர் விரும்பிய வடிவமாய், அவ்வத் திருமேனிகளில் அவ்வப்பொழுது தோன்றி நின்று அருள் செய்வர்.

☆ **ஞானிகள் எக்கருத்துப் பற்றி வழிபடுவாகள்? அவர்களுக்குச் சிவபெருமான் எப்படி நின்று அருள் செய்வர்?**

ஞானிகள் மேலே சொல்லப்பட்ட முத்திறத்தாரும் போல ஓரிடமாகக் குறியாத அன்பு மாத்திரத்தால் அங்கே வழிபடுவர்கள்: அவர்களுக்குச் சிவபெருமான், கன்றை நினைந்த தலையீற்றுப் பசுவின் முலைப்பால் போலக் கருணை மிகுதியினால் அவ்வன்பே தாமாகி, எப் பொழுதும் வெளிப்பட்டு நின்று அங்கே அருள் செய்வர்.

☆ **சிவபெருமானுடைய திருவுருவங் சிவசத்தி வடிவம் என்று முன் சொல்லப்பட்ட தன்றோ; இங்கே அவர் திருவுருவம் மந்திர வடிவம் என்றது என்னை?**

சிவபெருமானுக்கு வாச்சிய மந்திரமாகிய சிவசத்தியே உண்மை வடிவம்; அச்சிவசத்தி, கரியினிடத்தே அக்கினி போல, வாசக மந்திரத்தினிடத்தே நின்று சாதகருக்குப் பயன் கொடுக்கும். ஆதலினாலே, சிவபெருமானுக்குச், சிவசத்தியினால், வாசக மந்திரத்தோடு சம்பந்தம் உண்டு? அச்சம்பந்தம்பற்றி வாசக மந்திரஞ் சிவபெருமானுக்கு உபசார வடிவமாம்.

☆ **மந்திரநியாசம் என்றது என்ன?**

வாச்சிய மந்திரங்களாகிய சிவசத்தி பேதங்களை உள்ளத்திலே சிந்தித்து, அவைகளை அறிவிக்கும் வாசக மந்திரங்களை உபசரித்துச், சிவபெருமானுக்கு உபசார வடிவத்தை அம்மந்திரங்களினாலே சிர முதலாக அமைத்தலாம். (நியசித்தல் = வைத்தல், பதித்தல்)

☆ **இட்டலிங்கமாவது யாது?**

ஆசாரியர் விசேஷதீக்ஷையைப் பண்ணி, சீடனைப் பார்த்து, "நீ உள்ளளவுங் கைவிடாது இவரை நாடோறும் பூசி" என்ற அநுமதி செய்து, "அடியேன் இச்சீரம் உள்ள வரையுஞ் சிவபூசை செய்தன்றி ஒன்றும் உட்கொள்ளேன்" என்ற பிரதிஞ்ஞை செய்வித்துக்கொண்டு கொடுக்க, அவன் வாங்கிப் பூசிக்கும் இலிங்கமாம். இது, ஆன்மார்த்த லிங்கம் எனவும், சல லிங்கம் எனவும் பெயர் பெறும்.

☆ **இட்டலிங்கம் எத்தனை வகைப்படம்?**

வாண லிங்கம், படிக லிங்கம், இரத்தின லிங்கம், லோகஜ லிங்கம், சைல லிங்கம், க்ஷணிக லிங்கம் எனப் பல வகைப்படும்.

☆ **எவ்வகைப்பட்ட சிவலிங்கம் பிரதிட்டை செய்வித் துக்கொள்ளல் வேண்டும்?**

சிவாகம விதிவிலக்குகளை ஆராய்ந்து, சிவலிங்க ங்களைப் பரீக்ஷை செய்து, யாதொரு குற்றமும் இல்லாததாய் நல்லிலக்கணங்கள் அமையப்பெற்றதாய் உள்ள சிவ லிங்கத்தையே பிரதிட்டை செய்வித்துக் கொள்ளல் வேண்டும்.

# Kathirgamam Theivanai Amman Temple Services and Administration

Mrs. Ramya Thineswaran

The centre stage of the Annual Kathirgamam festival at Theivanai Amman Temple on the festival's with the temple's colourful flag-hoisting ceremony on 08.07.2000. Recent improvements to the temple's infrastructure, services and administration also have been drawing favourble notice from the public alike.

Historically Theivanai Amman and her traditions hail from North India where they are associated with Hindu monks of the Dasanami Order founded by Athi Sankaracharya in the Eighth Century A.D. Myth and History combine to explain how Lady Devasena came from North India to Kathirgamam with a retinue of saintly servants.

Centuries ago, it is believed, the Kathirgamam God's senior spouse prompted Kalyana Giri Swami to leave North India and come South to locate her wayward husband and bring him home.

The sage is said to have found Lord Skanda at Kathirgamam, he never returned to North India but remained and founded. Theivanai Amman Temple since that time, all three deities are believed to be happily settled at Kathirgamam.

Kalyana Giri Swami thus became the founding abbot or mathadhipati of Kathirgamam Thevanai Amman Temple. Since that time the sampradaya of North Indian mathadhipatis has administered the Madam and associated temples.

Since the departure of the former mathadhipati Dattarama Giri Swami, shortcomings in the temple administration began to emerge. Recently, however, the Kanchi Sankaracharya personally appointed two qualified North Indian Dasanami sannyasis, Pumanand Giri Swami (47) as Trustee and Mathadhipati and Swami Vigyananand Ashram (36) as Deputy Abbot, to continue the Dasanami succession of administrators. The resonant voice of the gifted and vigorous new mathadhipati now fills the kovils and madam once again to the delight of Tamil and Sinhala devotees, despite the fact that he is conversant in Hindi, Sanskrit and English only.

Among recent changes to the infrastructure of the institution, notable are the complete renovation and refitting of the madam with a sturdy new roof, ceiling fans and sanitary floor tiles. Annadanam is served in the traditional fashion of Jaffna Tamils with devotees seated on the floor taking meals from plantain leaves, but with the added feature of stainless steel serving carts.

Annadanam is also served to devotees daily and to the public every Friday outside the festival season.

Not only Tamil Hindus alone but devotees of all communities, rich and poor alike, come in droves to avail themselves of the Madam's excellent (and free) vegetarian meals, including wealthy urban devotees, Pada Yatra pilgrims, poor mothers with children, swamis, sadhus and fakirs.

Over the centuries, many great souls like Kriya Babaji and Palkudi Bawa have been associated with the sacred setting of Thevanai Amman Temple. Devotees of Kriya Babaji will soon consecrate a shrine built upon the site where the Master Siddha sat in meditation under a great banyan tree many centuries ago as directed by his guru Bhogar Nada Siddhar.

The flag-hoisting ceremony at Kathirgamam Thevanai Amman Temple takes place on the seventh day of the Kathirgamam festival i.e. July 8. On the same day a flag-hoisting ceremony also takes place at the Ishwara (Siva) Temple and a new pandal is built in front of the Kathirgamam Maha Devalayam, signifying that the Esala festival is now in full swing.

One who is prepared to abandon that which he desires very much and accept that which he dislikes the most for the sake of God is a true devotee of God.

# நினைவிற் கொள்வதற்கு

| | | | | |
|---|---|---|---|---|
| ஆவணி | 1 | 17.08.2000 | வியாழன் | மாதப்பிறப்பு |
| | 3 | 19.08.2000 | சனி | சங்கடஹர சதுர்த்தி விரதம் |
| | 4 | 20.08.2000 | ஞாயிறு | ஆவணி ஞாயிறு |
| | 6 | 22.08.2000 | செவ்வாய் | கார்த்திகை விரதம் |
| | 7 | 23.08.2000 | புதன் | ஸ்ரீ கிருஷ்ண ஜெயந்தி |
| | 9 | 25.08.2000 | வெள்ளி | ஸ்மார்த்த ஏகாதசி |
| | 10 | 26.08.2000 | சனி | வைஷ்ணவ ஏகாதசி |
| | 11 | 27.08.2000 | ஞாயிறு | பிரதோஷவிரதம், ஆவணி ஞாயிறு செருத்துணையர் குருபூசை |
| | 12 | 28.08.2000 | திங்கள் | புகழ்த்துணையார் குருபூசை, அதிபத்தர் குருபூசை |
| | 13 | 29.08.2000 | செவ்வாய் | அமாவாசை விரதம் |
| | 15 | 31.08.2000 | வியாழன் | மறைஞான சம்பந்தர் குருபூசை |
| | 16 | 01.09.2000 | வெள்ளி | விநாயக சதுர்த்தி விரதம், ஸாமவேத உபாகருமம் |
| | 17 | 02.09.2000 | சனி | ரிஷி பஞ்சமி |
| | 18 | 03.09.2000 | ஞாயிறு | ஷஷ்டி விரதம், ஆவணி ஞாயிறு |
| | 20 | 05.09.2000 | செவ்வாய் | குலச்சிறையார் குருபூசை |
| | 22 | 07.09.2000 | வியாழன் | ஆவணி மூலம், குங்கிலியக் கலயர் குருபூசை |
| | 24 | 09.09.2000 | சனி | பரிவர்த்தன ஏகாதசி விரதம் |
| | 25 | 10.09.2000 | ஞாயிறு | ஆவணி ஓணம், ஆவணி ஞாயிறு |
| | 26 | 11.09.2000 | திங்கள் | பிரதோஷ விரதம் |
| | 27 | 12.09.2000 | செவ்வாய் | நடேசரபிஷேகம் |
| | 28 | 13.09.2000 | புதன் | பூரணை விரதம் அனந்த விரதம், உமாமகேசுவர விரதம் |
| | 29 | 14.09.2000 | வியாழன் | மஹாளய பக்ஷாரம்பம் |
| | 31 | 16.09.2000 | சனி | ஷடசீதி புண்ணிய காலம் இரவு 2.24 முதல் |

Regd. No. QD/22/News 2000 இவ்விதழ் சைவநீதி நிறுவனத்தினரால் 195, ஆட்டுப்பட்டித்தெரு, கொழும்பு-13 என்னும் முகவரியிலுள்ள லக்ஷ்மி அச்சகத்தில் அச்சிட்டு 2000-07-16 இல் வெளியிடப்பட்டது.

